# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

மே - ஜூன் 2024


ஆண்டு 4 ▲ இதழ் 06

விலை 200/-



ஆளுமை அறிமுகம்

## 'கலாபூஷணம்' இஸ்மாலிகா ராஜா



# பேராசை

உள்ளத்தில் திருப்தி
எள்ளளவும் இல்லாதார்
பள்ளத்தில் வெள்ளமாய்
பேராசை தனை நிறைப்பார்

போதும் என்பதை
பெருமனதில் கொள்ளாதார்
வாதையும் சூதையும்
வழியாகக் கொள்வார்

வரவுக்குள் செலவினை
வடிவமைக்க வகை தெரியார்
வாழ்க்கையைத் தொலைப்பார்
வசந்தத்தை இழப்பார்

உள்ளதை கொண்டே
உவகையாய் வாழாதார்
பொல்லாத தீமைகளை
சொல்லாமல் சேர்ப்பார்

உலகத்தை சுருட்டிட
உத்தேசம் கொள்வோர்கள்
உண்மையில் அழிவினை
தன்னிலே வார்ப்பார்

நடந்திட முடியாதார்
பறந்திட நினைப்பார்
இருப்பதைக் கொண்டு
திருப்தியை காணார்

பேராசை பேய்வந்து
பயம் காட்டி நல் வாழ்வை
பாழாக்கும் பலியாக்கும்
பசுமையைக் கரியாக்கும்

பேராசை உள்ளத்தில்
பேரிழப்பை பரிசாக்கும்
தடுமாறும் உள்ளத்தில்
ஏமாற்றத்தை அரங்கேற்றும்

**ஹாஜறா கலீலுர் ரஹ்மான்**
காத்தான்குடி.


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

மே – ஜுன் 2024

ஆண்டு 4 ▲ இதழ் 06

**பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா**
Chief editor & publisher : Sithy Wafeera

**சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**
Hon. editor : Tamilnenjam Amine

**ஆசிரியர் குழு :**
Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸரா பரூஸ்

**வடிவமைப்பு:**
Omardeen Aysha Shakeela

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
email :
muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

# ஆசிரியர் பக்கம்

*அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்!*

*இம்மாதம் பன்னிரெண்டாம் திகதி மலரவிருக்கும் சர்வதேச அன்னையர் தினத்தை அன்னையரின் ஆசிகளோடு வரவேற்போம். அவர்களுக்கான ஒரு தினத்தை மட்டும் கொண்டாடுவதில் உடன் பாடு இல்லையெனக்கு ஆயுளுக்கும் அவர்களின் அன்புக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் நாம். ஆகவே அவர்களின் எல்லையில்லா அன்பைக் கொண்டாடி மகிழ்வோம். அவர்களை யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்காமல் இருப்பதே அவர்களுக்கு உலகையே உள்ளங்கையில் கொடுத்த பூரிப்பைத் தரும். உயிரில் சுமந்த வளை உணர்வில் சுமந்து கொள்ளுங்கள்! அது போதும்!*

*அதேபோலத் தாய்மை என்னும் மகத்துவத்தை, அன்னையர் என்ற பட்டம் மூலம் பெற்றுத் தரும் எம் மழலைச் செல்வங்களின் வாழ்வு தற்கால சூழலில் பாதுகாப்பற்றதை உறுதிப்படுத்தும் விதமாகவே பல சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. பெற்ற குழந்தைகளுக்கு முதல் பாதுகாப்பு அன்னையர் தான் என்பதில் மாற்றுக் கருத்து இருக்கமுடியாது. தாயவளின் கண்காணிப்பு இருக்கும் பட்சத்தில் இதுபோன்ற துர்ச்சம்பவங்களில் இருந்து குழந்தைகள் பாதுகாப்புப் பெறுவார்கள் என்பதிலும் ஐயமில்லை.*

*எனவே வரும் அன்னையர் தினத்தில் இதை ஒரு வேண்டு கோளாகவே முன்வைக்க விரும்புகிறேன். தம் குழந்தைகள் ஏதும் சொல்ல முற்பட்டால் கொஞ்சம் செவிசாய்த்துக் கேளுங்கள்! குழந்தைகளை சூழவுள்ள ஆபத்துக்களை அவர்கள் அறிவுக்கு எட்டும்விதமாகப் புரியவையுங்கள்! நெருக்கமான உறவுகளாக இருந்தாலும் அவர்கள் இருக்க வேண்டிய எல்லையை குழந்தைகளுக்கு சுட்டிக்காட்டுங்கள்! நல்லவரென்னும் போர்வையில், வக்கிரம் பிடித்த உறவுகளும், போலி மனிதர்களும் உண்டு என்பதை அடையாளம் காட்டுங்கள்! குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த இனிப்புகள்,*

குளிர்பானங்கள், ஏனைய உணவுப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், போன், கேம், காட்டூன்கள், ஸ்ட்டிக்கர் வகைகள் போன்றவைகளைக் காட்டிக்கூட தம் பக்கம் அவர்களை ஈர்த்தெடுக்கும் அபாயம் இருப்பதை தெளிவு படுத்துங்கள்! இதுமட்டுமல்ல, உங்களைச் சூழவும் நடப்பதை கூர்ந்து அவதானியுங்கள்! இது சமூகத்திலுள்ள மற்ற குழந்தைகளையும் பாதுகாக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றுத் தரும்.

இந்த விடயங்களில் நீங்கள் கண்ணுங்கருத்துமாக இருப்பீர்களேயானால், நீங்கள் வெற்றிக்குரிய ஒரு அன்னையாக மிளிர முடியும். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களைத் தவிர்த்து, சமூகத்துக்கும் பெரும் பங்காற்ற முடியும்.இனியும் இன்னுமொரு குழந்தையின் உடலும் உயிரும் கசக்கி எறியப்படாமல் காக்க அன்னையராக நாம் உறுதி பூணுவோம்.

அனைத்து அன்னையருக்கும் அன்னையர் தின வாழ்த்துகளை முத்தமிழ் கலசம் சார்பாகத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நன்றி!

வ.்.பிரா வ.்.பி

பிரதம ஆசிரியர்





# அநீதிகளில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்போம்

பூவுலகில் பொன் மலர்களான சிறுவர்கள், வாழும் தேசத்தின் பெறுமதியான சொத்துக்களாவார்கள் என்றால் மிகையாகாது. நாளைய தலைவர்களான இவர்கள் பக்குவமான பாதையில் செல்ல வழிகாட்டுவது மூத்தோர் அனைவரினதும் தார்மீகப் பொறுப்பாகும். ஆனால் இன்றைய சிறுவர்கள் பல்வேறு சிக்கல்களில் சிக்கித் தவிப்பதை நாம் அறிந்து கொண்டு தான் இருக்கின்றோம்.

சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்ட ஏற்பாடுகள் உலகினில் காணப்பட்ட போதிலும், இவர்களின் உரிமைகள் சூறையாடப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன.

சிறுவர் உரிமைகள் சாசனமானது, ஐக்கிய நாடுகள் சபையினால் 1989ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலங்கை அதிலே 1991ல் கைச்சாத்திட்டது.

பொதுவாக 18வயதுக்கு உட்பட்டவர்கள் சிறுவர்கள் எனப்பட்டார்கள். அவர்கள் உடல், உள, உணர்வு ரீதியாக வன்கொடுமைப் படுத்தப்படும் போது, அவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப் படுவதோடு எதிர்காலமும் சிதைக்கப்பட்டுக் கேள்விக்குறியாகி விடுகின்றது.

இளந்தளிர்களான இவர்களை உடல்ரீதியாக அடித்தல், காயப்படுத்தல், தொழிலுக்கு அமர்த்தல், அங்கங்களைச் சிதைத்தல் என்பவை உடல் ரீதியான துஷ்பிரயோகம் என்று சொல்லப்படுகின் றது.

திட்டுதல், பயமுறுத்தல், சாபமிடல், நிராகரித்தல், தனிமைப்படுத் தல், பிற பிள்ளைகளுடன் ஒப்பிட்டுக் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்தல், மானபங்கப்படுத்தல் போன்றன உளரீதியான துஷ்பிரயோகம் எனப்படுகின்றது.

பொருத்தமற்ற தொடுகைகள், தொந்தரவுகள், பாலியல் உணர்வைத் தூண்டும் சொற்பிரயோகம், பாலியல் செய்கையில் ஈடுபடுத்தல், போன்றனவற்றை பாலியல் துஷ்பிரயோகம் என்பார்.



உணவு உடை, சுகாதாரம், பாதுகாப்பு மருத்துவம் கல்வி போன்ற அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படுவது புறக்கணிப்பு ரீதியான துஷ்பிரயோகமாகும்.

பொதுவாக சிறுவர்களின் இயல்புகளுக்கும் தன்மைகளுக்கும் முரணாகப் பயன்படுத்தும் இச் செயற்பாடுகளானது, குடும்ப வன்முறை, வறுமை, போதைப் பொருட்பாவனை, பெற்றோரின் விவாகரத்து, பெற்றோர் வெளி நாடு செல்லல், தவறான சகவாசம், தனிமை மற்றும் பிழையான இணையத்தளப் பாவனை போன்ற இன்னோரன்ன காரணங் களால் நிகழ்ந்து விடுகின்றன.

பெரும்பாலும் குடும்ப வன் முறைகளாற் பிள்ளைகள் வழிமாறு கின்றனர். வருடாந்தம் குடும்ப வன்முறைச் சம்பவங்கள், ஒரு இலட்சம் எண்ணிக்கைக்கு மேல் பதிவாகின்றதாகக் கூறப்படு கின்றது.

பெற்றோர்களின் பிரிவினாலே கைமாறப்படும் பிள்ளைகள் அன் புக்கு ஏங்கியே, உடலுளப் பாதிப் படைவது மட்டுமல்லாமல் கல்வி யையும் இழந்து விடுகின்றனர். அடிமைகளாக்கப் படுகின்றனர். வேலைக்கமர்த்தப் படுகின்றனர். அது மட்டுமல்லாமல் பாலியல் துன் புறுத்தலுக்கும் உட்படுகின்றனர்.

மேலதிக வகுப்புகளுக்குச் செல் லுமிடங்களில் ஆசிரியர்களாலும் ஏற்றிச் செல்லும் வாகனச் சார திகளாலும் பிஞ்சுகள் வன் கொடு மைக்கு ஆளாகின்றனர்.

பொதுவாகச் சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமைகள் பெற் றோர்கள், வளர்ப்புப் பெற்றோர் கள், உறவினர்கள், பிள்ளை பராம ரிப்பாளர்கள், ஆசிரியர்கள், தொழில் வழங்குனர்கள், அயலவர் கள், வாகனச் சாரதிகள், குடும்ப நண்பர்கள், நம்பிப் பழகும் முதி யோர்கள் போன்றவர்களினா லேயே நடைபெறுகின்றன.

இந்திய ஆசிபா, யாழ்ப் பாணத்து வித்யா, திருகோண மலை வர்ஷா, கொடதெனிய சேயா, கிருலப்பனை துஷ்யந் தினி, அட்டுளுகம ஆயிஷா இது போன்ற எத்தனை தளிர்கள் தான் இன்னுயிரை இழந்தன.

அண்மையில் மன்னாரிலும் பத்து வயதுச் சிறுமி ஒருவர் வன் கொடுமைக்கு ஆளாகிய நிலையில் கொலை செய்யப் பட்டுள்ளார்.

மேலும் வவுனியா தோணிக்கல் பிரதேசத்தில் 14வயதுச் சிறுமி தந் தையால் வன்புணர்வுக்கு உட்படுத் தப்பட்டார். செய்தி கிடைத்த பொலிசார் தந்தையைக் கைது செய்ததாக அறியக்கிடைக் கின்றது.

அடுத்து, வவுனியாவில் இரண் டாம் தரம் கற்கும் மாணவன் ஒருவருக்கு ஆசிரியர் அடித்ததால் முகத்தில் காயம் ஏற்பட்டது. பின்னர் ஆசிரியர் கைது செய்யப் பட்டார்.

அடுத்து, வத்தளையில் வாழும் குடும்பம் ஒன்று தங்களின் பிள்ளைகளை யாசகம் செய்ய அனுப்பிக் கிடைக்கும் பணத்தில் வீடு கட்டுகின்ற செய்தி ஒன்று பொலிசாருக்குக் கிடைத்ததாகவும் அறியக் கிடைக்கின்றது.

இவ்வாறு ஆங்காங்கே வன் கொடுமைகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. இவற்றி லிருந்து வளர்ந்து வரும் நம் செல் லங்களைப் பாதுகாத்துக் கொள்ள சமூகத்தில் அனைவரும் மிகவும் அவதானமான நடவடிக் கைகளில் ஈடுபட வேண்டும்.

- பிஞ்சுகளிடம் தவறாக நடந்து கொள்பவர்களின் தொடுகை யைப் புரிந்து கொள்ளத் தொடுகை பற்றி (Good touch, Bad touch ) அவர்க ளுக்குக் கூறி வைத் தல் வேண்டும்.
- புதியவர்கள் தரும் உணவுகள் இனிப்புகளை வாங்கி உண்ணக் கூடாது.
- பாடசாலை மற்றும் மேலதிக வகுப்பு நிலையங்களில் தனிமை யில் இருக்கக் கூடாது.



- ஆளரவம் இல்லாத பாதைகளில் செல்லக் கூடாது.
- வித்தியாசமானவர்களின் தொந் தரவைக் கண்டால் சத்தமிட்டுப் பிறரை அழைத்தல் வேண்டும்.
- பிழையான இணையத்தளப் பாவனையைக் குறைக்க வேண்டும். என்பது போன்ற விடயங்களை அவர்களுக்குக் கூறிவைக்க வேண்டும். உண் மை யில் இணையத்தளப் பாவனை மூலம் இளஞ்சிறார்கள் உடல் ரீதியாக மட்டுமல்ல உள ரீதியா கவும் பாதிக்கப்படுகின்றனர். இணைய உபயோகத் தின் போது நீலவொளித் தாக்கத்தினால் மூளைக் கலங்கள் தாக்கம் அடை வதாகக் கூறப்படு கிறது.


அது மட்டுமல்லாமல், இணை யத்தளத்தின் விளையாட்டுக்களி னாலும் உளம் பாதிக்கப்படுகின் றது என்பதனையும் அவர்களுக்கு விளங்க வைத்து விட வேண்டும்.

சிறுவர்கள் வன்கொடுமைக்கு உள்ளாக்கும் சம்பவங்களைக் கண்டால் ;

- சிறுவர் பாதுகாப்பு நடவடிக் கைக்கான இலங்கையின் அரச முறைப்பாட்டு இலக்கமான (1929) என்பதை இலங்கை மக் கள் எல்லோரும் அறிந்து வைத் திருத்தல் நல்லது. எதிர்பாராத விதமாக இச்சம்பவங்களைக் காணின் உடனே அறிவித்து விட முடியும்.

- கிராமசேவை உத்தியோகத்தர், பொலிஸ் நிலையம், மற்றும் பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவு, சிறுவர் நன்னடத்தைப் பிரிவு போன்ற இடங்களுக்கு உடனடியாக அறிவிக்க வேண் டும்.

நமது தாய் நாட்டிலே துஷ்பிர யோகத்தினால் கருவுற்ற 18 வய துக்குக் குறைந்த சிறுமியால் கருக் கலைப்புச் செய்ய முடியாது எனச்



சட்டம் கூறுகிறது. அதே வேளை திருமணமும் செய்யமுடியாது என்பதும் வேதனையே! எனவே பாதிக்கப்பட்டவர்களின் நிலை இன்னும் மோசமாகும் வாய்ப்புத்தான் ஏற்படுகிறது.

அத்தோடு துஷ்பிரயோகம் செய்தவர் சிறையில் இருந்து குறிப்பிட்ட நாட்களின் பின்னர், பிணையில் செல்லவும் முடியும். அண்மையில் மன்னாரில் 14வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்து கொலை செய்த கைதி தப்பியோடி விட்டதாகவும் கூறப்படுகிறது. ஆகவே, இக்குற்றங்களுக்கான தண்டனைச் சட்டங்கள் இன்னும் இறுக்கமாக்கப்படல் வேண்டும்.

மேலும், ஆண் சிறார்களை வன்கொடுமைக்கு ஆளாக்கியோர்க்கான தண்டனைகள் குறித்து நம் நாட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பதும் வேதனையான விடயமே! எத்தனையோ கயவர்கள் ஆண் பிஞ்சுகளிடம் தவறாக நடந்து கொண்டு அவர்களின் உள்ளங்களை நசுக்கி விடுகின்றனர். அந்தக் கயவர்களுக்கும் கூட கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். அதுபற்றி சட்டத்திலும் குறிப் பிடப்பட வேண்டும்.

உண்மையிலே இந்தப் பிரச்சினை இன்று உலகளாவிய ரீதியாகக் காணப் படுகின்ற வேதனையான மனிதாபிமானமுள்ளவர்களால் வெறுக்கத்தக்க தொன்றாகும்.

1954லே ஐக்கிய நாடுகள் சபை சிறுவர் உரிமை சாசனம் கொண்டு வந்து விட்டது. என்றாலும், சிறுவர் துஷ்பிரயோகங்களும் வன்கொடுமைகளும் இன்னும் குறைந்தபாடில்லை.

ஆகவே சமூகத்திலுள்ள அனைவரும் ஒன்றிணைந்து சிறுவர் வன்கொடுமைகளைக் கண்காணித்துச் செயற்பட்டால், ஓரளவு இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்பது எனது கருத்தாகும்.

**கின்னணியா சபீனா**



## மழலைச் செல்வம்

அயல் வீட்டு வீணை ஒன்று
அழகாய் என் பெயர் மொழிந்தது
ஆசையாய் யன்னல் திறக்க
தூரத்து சோலை ஒன்றின்
சொந்தக்கார பட்டாம்பூச்சிகள்
பொட்டு பொட்டாய் எழில் சிறகு
தட்டி தட்டி எட்டி பார்க்குது
என் வீட்டினுள்ளே

வெறிச்சோடி போன
விண்வெளியைப் பார்த்து
வினவியது என் உள்ளம்
வெண்ணிலவு எங்கே!

சிறகில்லா சின்ன
தேவதைக் குஞ்சொன்று
என் வீட்டு கட்டிலில்
என் இரத்த உறவின் பேத்தியாய்.
இதயத்தின் உறவுகளே இனிய
சேதி சொல்லி விட்டேன்!
இறைவனிடம் உங்கள் கரம்
எங்களுக்காகவும் உயரட்டும்

**அஸ்மா டீன்**
கம்பளை

## மனசாட்சி

மனவெழுச்சிகளோடு போராடும்
வாழ்க்கையாகிப் போகுதே!
மனமுரண்டாய் அறமிங்கு
வேரோடு சாகுதே!

அகச்சுத்தம் பெற்றாலே
அகிலமே சிறக்குமே!
அன்பு எனும் வாசல்
அழகாகத் திறக்குமே!

மனமென்ற நீதிமன்றத்தில்
உன் மனசாட்சியே நீதிபதி
குணங்கெட்டு விதிமாறாமல்
காத்திடு நீ அதிபதி

சிந்தையிலே தராசதை
நேராகப் பற்றிடு!
சிந்தனைகள் தரிசின்றிச்
சீராகப் பெற்றிடு

அகத்தினில் தோன்றிடும்
சரியான தீர்ப்பு
செகத்தினில் காண்பாயே
புதியதோர் கூர்ப்பு

**பஸ்லா பர்ஸான் ,** காத்தான் குடி, இலங்கை

## படித்ததில் பிடித்தது...

**வாழ்க்கையைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் மூன்று இடங்களுக்குப் போய் பார்க்க வேண்டும்.**

1. மருத்துவமனை- ஆரோக்கியத்தை விட எதுவுமே பெரிதில்லை என்பதை மருத்துவமனை புரிய வைக்கும்.
2. சிறைச்சாலை - சுதந்திரத்தை விட விலைமதிப்பானது எதுவுமில்லை என்பதை சிறைச்சாலை புரிய வைக்கும்.
3. சுடுகாடு - உயிரோடு வாழ்வதை விட பெரிது வேறொன்றுமில்லை என்பதை சுடுகாடு புரியவைக்கும்.

குரைஷா முஹமட்

# காலச்சக்கரம்

காலம் கடந்து
மட்டும் செல்லவில்லை.
எல்லாவற்றையும் கடத்திக்
கொண்டும் செல்கிறது

கடிகாரங்கள் அத்தனையும்
நின்று போனாலும்
காலத்தின் உற்சாகத்தில்
குறைகள் ஏதும் வருவதில்லை
அது ஓடிக்கொண்டே இருக்கும்.


காலத்தின் மாற்றம்
வாழ்வின் நிலையற்ற தன்மையை
கற்பித்து செல்கிறது.

காலத்தின் ஓட்டம் சொல்லித்தரும்
பாடங்கள் வாழ்க்கைக்கு
அனுபவம் என்னும்
பட்டத்தை பரிசளிக்கிறது.

அது சிலவற்றை காணாமல் செய்து
விடுகிறது. சிலவற்றை மீண்டும்
கைகளில் கொண்டு வந்து சேர்க்கிறது.

சில மனக்கசப்புகளை
மறதி என்னும் மாயத்திரையால்
மூடி விடுகி றது.

காயங்களுக்கு கட்டு
போட்டும் விடுகிறது
சில கோபங்களை கட்டுப்படுத்தியும்
வைக்கிறது
தென்றலை சூறாவளியாக
மாற்றியும் விடுகிறது. சூறாவளியை
தென்றலாக அமைதி படுத்தியும்
வைக்கிறது.
சில ஏழைகளை
செல்வந்தனாக்கி விடுகிறது,
பல செல்வந்தர்களை



**ஷிபானா ரிபதா,**
பதுளை

பிச்சைக்காரனாக்கி விடுகிறது.
இறப்புகளை ஈடு
செய்ய பிறப்புகளை
அறிமுகப்படுத்துகிறது.

பழமை எல்லாம் புதுமையாக மாற்றி
விடுகிறது.
இளமை எல்லாம்
முதுமைக்கு இழுத்துச்
செல்கிறது - ஆனால்..

காலத்திற்க்கு மட்டும்
என்றும் வயது
பதினாறாகவே உள்ளது.

காலம் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிக்
கொண்டே செல்கிறது. அப்படியே
இடைவெளியின்றி கேள்விகளையும்
தொடுத்துக் கொண்டே செல்கிறது.

காலம் கடந்து செல்கிறதா?
அல்லது சுழன்று வருகிறதா
முடிச்சவிழ்க்கா மர்மங்கள்
தொடர்கின்றன.





# சிறுவர்களுக்கு ஏற்படும் காய்ச்சல் வலிப்பு

## (FEBRILE CONVULSIONS/FEBRILE SEIZURES)



Dr. **ஜலீலா முஸம்மில்** (MBBS/SL),
**ஆதார வைத்தியசாலை,**
**ஏறாவூர்.**

குழந்தைச் செல்வங்கள் எமது எதிர்காலத் தூண்கள். பெற்றோரின் ஈடு இணையற்ற வரமாக அவர்களை குறிப்பிடலாம். அவர்களை நோய் நொடிகளின்றி பேணிக் கண்ணுங்கருத்துமாக காப்பது பெற்றோர் அனைவரதும் கட்டாயக் கடமையாகும். குழந்தைகளுக்கு சிறு உபாதை என்றால் கூட பெற்றோர்கள் கூடிய அவதானத்துடன் அவர்களுடைய நோயை குணப்படுத்துவதில் சிரத்தை எடுப்பார்கள் என்பது கண்கூடு.

குழந்தைகளில் சிலருக்கு காய்ச்சல் ஏற்படும் போது காய்ச்சலுடன் வலிப்பும் (Febrile seizures) ஏற்படக்கூடும்.

காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படும் குழந்தைகளின் பெற்றோருக்கு தம் குழந்தைகள் பற்றிய அச்சமும் அவர்களின் எதிர்காலம் பற்றி ஒரு வித மனக்கவலையும் எப்போதும் இருக்கும். பெற்றோர் இதன் காரணமாக கடும் மனஅழுத்தத்துடன் காணப்படுவார்கள். எனவே

அனைவரும் இந்தக் காய்ச்சல் வலிப்பைப் பற்றி அறிந்து கொள்வது அவசியமாகிறது.

காய்ச்சல் வலிப்பு எனப்படுவது சிறு குழந்தைகள், பிள்ளைகளுக்கு வரும் காய்ச்சலுடன் ஏற்படக் கூடிய வலிப்பாகும். சாதாரணமாக 06 மாதத்துக்கும் 06 வயதுக்கும் இடைப்பட்ட பிள்ளைகள் இதனால் பாதிக்கப்படுகின்றார்கள்.

இருந்த போதிலும் ஒரு மாதத்திலிருந்து 06 மாதம் வரை சிறார்களுக்கு வலிப்புக்கான வேறு காரணங்கள் இல்லாதவிடத்து அது காய்ச்சல் வலிப்பாக கருதப்படுகின்றது. ஆனால், மூளைக் காய்ச்சலால் ஏற்படும் வலிப்பு அல்லது அசாதாரண அனுசேப தாக்கங்களால் (Me tabolic Cause) ஏற்படும் வலிப்பு இதில் அடங்காது.

**காய்ச்சல் காரணமாக ஏன் வலிப்பு ஏற்படுகிறது?**

காய்ச்சலுடன் ஏற்படும் வலிப்பு பொதுவாக 6 மாதத்திற்கும் 6 வயதிற்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கு ஏற்படும். காய்ச்சல் ஆரம்பித்தது முதல் 24 மணித்தியாலங்களுக்குள் அல்லது 48 மணி நேரத்திற்குள் வலிப்பு ஏற்படலாம். ஆனால் காய்ச்சல் ஏற்படும் எல்லாக் குழந்தைகளுக்கும் வலிப்பு ஏற்படுவதில்லை. சிறுவர்களில் 3% ஆனோருக்கு மட்டுமே இவ்வாறு காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படக் கூடிய சாத்தியம் உண்டு. கடுங்காய்ச்சலின் போது ஏற்படும் இந்த வலிப்பு சில வேளைகளில் மிதமான காய்ச்சலின் போது கூட ஏற்படலாம் என்பதைப் பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலும் காய்ச்சலுடன் கூடிய வலிப்பின் போது முழு உடலும் குலுங்கி அசையும் அல்லது ஒருபக்க அவயவங்கள் மட்டும் அசைவுறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கும்.

காய்ச்சலின் போது குழந்தைகளுக்கு ஏன் வலிப்பு ஏற்படுகின்றது என்னும் கேள்வி பெரும்பாலும் எல்லோரும் கேட்கக் கூடியது தான். வைரஸ் காய்ச்சல் காரணமாகவே காய்ச்சல் வலிப்பு பெரும்பாலும் ஏற்படுகிறது. ஆனால், குழந்தைகளுக்கு பொதுவாக எவ்வாறான காய்ச்சல் ஏற்பட்டாலும் வலிப்பு ஏற்படக்கூடும். பிள்ளைகளிலே மூளை என்பது தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்து கொண்டி



ருக்கும் ஓர் உடல் உறுப்பு ஆகும். பெரியவர்களின் மூளையின் அளவிற்கு அதன் தொழிற்பாடு முதிர்ச்சியடைந்து இருப்பதில்லை. எனவே பிள்ளைகளில் காய்ச்சலின் போது உடல் வெப்பநிலை அதிகரிக்கும் போது மூளையின் நரம்புக் கலங்களில் ஏற்படும் ஒரு சில இரசாயன மாற்றங்கள் /கணத்தாக்கங்கள் காரணமாக உடல் தசைகளில் ஏற்படும் தொடர்ச்சியான துலங்கலே வலிப்பாக வெளிப்படுகின்றது.

தசைகளில் திடீரென ஏற்படும் கட்டுப்படுத்தப்பட முடியாத குறுகிய துடிப்புகள் வலிப்புகளாகும். இந்த வலிப்புகள் காய்ச்சலால் ஏற்படுத்தப்படும் போது, அவை காய்ச்சல் வலிப்புகள் எனப்படுகின்றன.

காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படுவதில் மரபணுக் காரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதனால் தான் இந்நோய்த்தன்மை ஓர் குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைப் பாதிக்கிறது. உதாரணமாக பெற்றோரில் ஒருவருக்கு சிறுவயதில் காய்ச்சலுடன் வலிப்பு ஏற்பட்டிருந்தால், அவர்களது குழந்தைகளுக்கு இந்நோய் நிலைமை ஏற்படக் கூடிய சாத்தியம் மிக அதிகம்.

அதேபோன்று சகோதர சகோதரிகளில் ஒருவருக்கு காய்ச்சலுடன் வலிப்பு ஏற் பட்டு இருக்கும் எனின் மற்றைய வர்களுக்கு அது வரக்கூடிய வாய்ப்பு அதிகமாகக் காணப்படும்.

மேலும் இந்த நோய் அதிகம் வரக்கூடிய சாத்தியமுள்ளவர்களாக மூளை வளர்ச்சி குன்றிய மற்றும் முதிராக் குழந்தைகள், தாமதமான வளர்ச்சிப்படி நிலையில் உள்ள குழந்தைகள் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

பொதுவாக மூன்றில் ஒரு பங்கினருக்கு காய்ச்சல் வலிப்பானது மீண்டும் வரக்கூடிய வாய்ப்புள்ளது.

காய்ச்சலுடன் ஏற்படும் வலிப்பு என்பது வலிப்பு நோய் (Epilepsy) அல்ல என்பதை பெற்றோர் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். வலிப்பு நோய் என்பது காய்ச்சலின்றியே ஏற்படக்கூடியது.

காய்ச்சலுடனான வலிப்பினால் குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கு எவ்வித பாதிப்புக்களோ அல்லது பின்விளைவுகளோ ஏற்படுவதில்லை. சிறுவர்களின் கற்றல் திறமைக்கும் வளர்ச்சிப் படிகளுக்கும் அது எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

எனவே வலிப்பு நோய் போன்று வலிப்பினைக் கட்டுப்படுத்தும் விசேடமான மருந்துகள் (anti-epileptic drugs) காய்ச்சலுடனான வலிப்பில் பரிந்துரைக்கப்படுவதில்லை.

மேலும் 6 வயதைக் கடந்த பின் காய்ச்சலுடனான வலிப்பு ஏற்படும் பிள்ளைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டாலும் வலிப்பு ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லை என்பது மிகவும் மகிழ்ச்சிகரமான ஒரு விடயமாகும். ஆகவே காய்ச்சல் வலிப்பினால் நீண்ட கால பாதிப்புகள், மூளை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படும் என பெற்றோர் எள்ளளவும் ஐயம் கொள்ளத் தேவையில்லை.

**காய்ச்சல் வலிப்பின் வகைகள்**

காய்ச்சல் வலிப்பானது இரு வகையாக வகுக்கப்பட்டுள்ளது.

01) எளிய/சாதாரண காய்ச்சல் வலிப்பு (Simple Febrile Convulsion)
02) சிக்கலான காய்ச்சல் வலிப்பு (Complex Febrile Convulsion)

**எளிய காய்ச்சல் வலிப்பு (Simple Febrile Convulsion)**


இது பொதுவாக ஏற்படக் கூடிய வலிப்பாகும். 70 வீதமான குழந்தைகளுக்கு ஏற்படும் காய்ச்சல் வலிப்பானது இந்த வகைமைக்குள் அடங்கும். இதன் தன்மை குறுகிய கால வரையறை உடையது. இந்த வலிப்பு 15 நிமிடத்திலும் குறைவான நேரத்துக்கே நீடிக்கக் கூடியது. அதாவது வலிப்பு ஏற் பட்டு 15 நிமிடத்துக்குள் குழந்தை சாதாரண நிலைக்கு வந்துவிடும். ஒரு தடவை வரும் காய்ச்சலுடன் வலிப்பு ஒரு தடவை மாத்திரமே வரும்.

**சிக்கலான காய்ச்சல் வலிப்பு (Complex Febrile Convulsion)**

இது 30 வீதமான சிறுவர்களுக்கு இந்த வகைக் காய்ச்சல் வலிப்பு ஏற்படும். 15 நிமிடத்துக்கும் கூடுதலான நேரத் துக்கு வலிப்பு ஏற்படும். இவ்வலிப்பானது உடலின் ஒரு பக்கத்தில் மாத்திரம் இருக்கும். ஒரு தடவை வருகின்ற காய்ச்சலுடன் பல தடவைகள் வலிப்பு ஏற்படும். வலிப்பின் பிற்பாடு சில நரம்பு (Todds Paresis) சம்பந்தப்பட்ட பாதிப்புகள் தோன்றலாம்.

**காய்ச்சல் வலிப்பின் தன்மை**

திடீர் என்ற மயக்கம் அல்லது உணர்விழந்து போதல், கண் மேலே பார்த்தவாறு கை கால்களில்



விறைப்புத் தன்மையுடன் உடம்பில் குலுக்கல் ஏற்படலாம். இது ஒரு பக்கமான அவயவங்களில் வெளிப்படலாம். அல்லது இரு பக்கங்களும் வரலாம். இதன்போது சிறுநீர், மலம் வெளியாகக்கூடும்.

**வலிப்பு ஏற்படும் போது உடனடியாக செய்ய வேண்டியது.**

குழந்தைகளுக்கு காய்ச்சல் வலிப்பு ஏற்படும்போது முதலில் பெற்றோர்கள் அச்சம் கொள்ளாமல் பதட்டமடையாமல் நிதானமாக செயற்படவேண்டும்.

ஆபத்தான இடங்களிலிருந்து பிள்ளையைத் தூரவிலக்கி வையுங்கள். காற்றோட்டமான இடத்தில் குழந்தையின் உடலை இடது பக்கமாக சரித்து தலையையும், கழுத்தையும் சற்று உயர்த்தி வாயிலிருந்து உமிழ் நீர் வெளியே வடியக்கூடியதாக, வைக்க வேண்டும். அந்த நேரம் வாயினுள் உட்கொள்வதற்கோ/ சாப்பிடுவதற்கோ எதையும் கொடுக்க முயற்சிக்கக் கூடாது. குழந்தையின் வாயினுள் ஏதேனும் பொருட்களையோ அல்லது விரல்களையோ உட்செலுத்தக் கூடாது. உங்கள் பிள்ளையின் வாயில் ஏதாவதொன்றைப் போடும்போது மூச்சடைப்பை ஏற்படுத்தும் அல்லது பற்களை உடைத்துவிடும். கைகளில் கூர்மையான பொருட்கள் வழங்குவதையும் தவிர்க்க வேண்டும். இத்தகைய செயல்கள் மூலம் காயங்களையும், உயிராபத்தையும் தவிர்க்கலாம். உங்கள் பிள்ளையை பிடித்து வைக்க அல்லது அசைவுகளை நிறுத்தவும் முயற்சி செய்ய வேண்டாம்.



உங்கள் குழந்தையை சௌகரியமாக வைத்திருங்கள். மடிக்கப்பட்ட துணி போன்ற ஏதாவது மென்மையான ஒன்றை உங்கள் பிள்ளையின் தலையின் கீழ் வைக்கலாம். இறுக்கமான உடைகளை மற்றும் கழுத்தைச் சுற்றியிருப்பவற்றையும் கழட்டிவிடுங்கள். கண்ணாடி அணிந்திருந்தால் உடைந்து விடாமலிருக்க அதையும் கழற்ற வேண்டும்.

குழந்தையின் உடல் நிலையை சரியாக அவதானிக்கவேண்டும். அதாவது வலிப்பு ஏற்படும் விதத்தை அவதானிக்க வேண்டும். இதன்போது எவ்வித மருந்துகளையும் வழங்குவதற்கு முயற்சி செய்யக் கூடாது. வலிப்பு 5 நிமிடத்தையும் தாண்டினால் உடனடியாக

அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். வலிப்பு ஓரிரு நிமிடங்களில் குணம டைந்தால் கூட வைத்தியரை அணுகி ஆலோசனை பெறுவது அவசியமாகும். வைத்தியசா லைக்கு கொண்டு செல்லும்போது கூட குழந்தையின் உடலை இடது பக்கமாக சரித்து (Left Lateral Position) தலையையும், கழுத் தையும் சற்று உயர்த்தி வைக்கப் பட்ட நிலையிலேயே கொண்டு செல்லவேண்டும்.

**வலிப்பு வரும்போது செய்யக் கூடாத விடயங்கள்**

பெரும்பாலான தாய்மார்கள் குழந்தைக்கு காய்ச்சல் வலிப்பு வந்து விட்டால் காய்ச்சலை குறைப்பதற்காக துணியை ஈரப்ப டுத்தி குழந்தையின் உடலை துடைத்துவிடும் பழக்கமுடைய வர்களாக இருக்கின்றார்கள். இது தவறான முறையாகும். ஏனெனில், இது Core Temperature யை குறைத்து நடுக்கத்தை ஏற்படுத்தும்.

காய்ச்சல் வலிப்பு ஏற்படும் வேளையில் காய்ச்சல் நிவார ணியை (paracetamol) உடனடி யாக கொடுக்கத் தேவையில்லை. வலிப்பின் தாக்கம் முடிந்து குழந்தை சாதாரண உணர்வு நிலைக்கு வந்தவுடன் அதைக் கொடுக்கலாம்.

சில சமயங்களில் வலிப்பு வந்து நிறுத்தமடைந்ததன் பின்பு குழந் தைகள் குழப்பமடைந்தவர்க ளாயும் தூக்க மயக்கம் உள்ளவர் களாயும் காணப்படுவார்கள். எனவே அவர்கள் சிறிது நேரம் நித்திரைகொள்ள அனுமதிக்க வேண்டும். ஆனால் மருத்துவப் பராமரிப்பை நாடுவதற்கு, குழந்தை இயல்பான நிலைக்குத் திரும்பும்வரை காத்திருக்க வேண் டாம். வலிப்பு முடியும் வரையும் குழந்தை முழுமையாக தெளி வடையும் வரையும் அவருக்கு தண்ணீர், உணவு அல்லது மருந்து எதையும் கொடுக்கவேண்டாம்.

**காய்ச்சல் வலிப்புக்கான நிவார ணம் மற்றும் தடுப்பு/பாதுகாப்பு**

காய்ச்சல் வலிப்பு வராமல் முற்றாகத்தடுக்க முடியாது. ஆயி னும் காய்ச்சல் வருவதைத் தவிர்ப்ப தற்கான முயற்சிகளை அடிக்கடி மேற்கொள்ள வேண்டும். ஏனெனில், காய்ச்சல் வலிப்பு வருவ தற்கான முக்கிய காரணியாக (Viral Fever) அமைவதால் அது ஏற்படா மல் இருப்பதற்குரிய நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும். நோய் தொற்று ஏற்படக் கூடிய இடங்களுக்கு செல்லுதல், அசுத்த மான சூழலில் குழந்தைகளை விடுதல்,பெற்றோர்கள் பிள்ளை களை சன நெருக்கடியான இடத் துக்கு அழைத்து செல்லுதல், அடிக்கடி கை கழுவாமை, குழந் தைகளுக்கான சுத்தம் பேணாமை போன்ற நடவடிக்கையால் காய்ச்

சல் அடிக்கடி வரலாம். எனவே இவ் வாறான விடயங்களை தவிர்க்க வேண்டும்.


காய்ச்சல் நிவாரணியை தொடர்ச்சியாக கொடுப்பதன் மூலம் (Regular Antipyretics) காய்ச்சல் வலிப்பு வருவதைத் தடுக்க முடியாது. ஆராய்ச்சிகளின் முடிவாக, பரசிற்றமோல் (Paracet amole) போன்ற காய்ச்சல் நிவார ணிகள் காய்ச்சல் வலிப்பு மீண்டும் வருவதைத் தவிர்ப்பதாக அறியப் படவில்லை. ஆனால், காய்ச்சல் வரும் வேளைகளில் மட்டுமே இவற்றை பாவிப்பது நன்று. காய்ச் சல் நிவார ணிகள் காய்ச்சல் வந்த நேரங்களில் காய்ச்சலைக் குறைத்து குழந்தைகளில் வலிப்பு ஏற்படுவதைக் கட்டுப்படுத்தும். குழந்தைகளைக் காய்ச்சலின்றி ஆறுதலாக,சுகமாக வைத்திருக்க உதவும்.

காய்ச்சல் வரும்போது வலிப் புக்கான மருந்துகளைப் பாவிப்ப தால் காய்ச்சல் வலிப்பு மீண்டும் வருவதை தவிர்க்க முடியும். ஆனா லும் இவ்வாறு செய்வது ஆரோக் கியமானது அல்ல. காய்ச்சல் ஆரம் பித்த வேளையில் இருந்து வாய் வழியாக வலிப்புக்கான மருந் துகளை (Oral Diazepam) இரு நாட்களுக்கு பாவிப்பதன் மூலம் வலிப்பு வருவது குறைவதற்கான வாய்ப்பு இருக்கிறது. எனினும், இதனால் வரும் பக்க விளைவுகள் அதிக தூக்கத் தன்மை, உணர்வி ழுத்தல், தற்காலிக தள்ளாட்டம், உடலின் தசைகள் இணக்கமற்ற நிலை போன்றவை அதிகமாக இருப்பதால் இந்த மருந்துகளை காய்ச்சல் வலிப்பு இருக்கின்ற எல்லா குழந்தைகளுக்கும் வைத்தி யர்கள் சிபாரிசு செய்வதில்லை.

ஆனபோதிலும், அடிக்கடி அதிகமான வலிப்பு வரும் குழந் தைகளுக்கும், குழந்தையைப் பரா மரிக்க திடமான நம்பிக்கையான பெற்றோர்கள் இல்லாதவிடத்தும், அதிக பதட்டமான பெற்றோர்கள் அல்லது அருகில் வைத்தியசாலை வசதி இல்லாதவர்களுக்கும் குழந்தை விஷேட வைத்திய நிபுணர் (consultant pediatrician) மருந்து களை பரிந்துரை செய்வதற்கு முடிவெடுக்கலாம்.

**பரிசோதனைகள்**

சாதாரண காய்ச்சல் வலிப்புக்கு எந்தவிதமான இரத்தப் பரிசோத னைகளோ, அல்லது மூளை ஸ்கேன்களோ (Brain Imaging), தலைப்பட்டியோ (EEG) அவசிய மற்றது. மேலும் இவை மிகையான செலவையும் ஏற்படுத்தும்.



ஆனாலும் சிற்சில சந்தர்ப்பங்களில் சில பரிசோதனைகள் செய்வதற்கான அவசியமும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. அதாவது மூளைக் காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் காய்ச்சல் வலிப்பு ஏற்படும் போதும், 06 மாதத்துக்கும் 01 வயதுக்கும் உட்பட்ட சிறுபிள்ளைகள், முதல் தடவை காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படும் போதும் (LP- Lumbar Puncture) முள்ளந்தண்டுப் பாய்மப்பரி சோதனை செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். ஏனெனில் இந்த வயதுக்குள் மூளைக் காய்ச்சலையும், சாதாரண காய்ச்சல் வலிப்பையும் பிரித்தறிவது சிக்கலானதாகும். ஏற்கனவே மருந்து கொடுத்து அதன் பிறகு காய்ச்சல் வலிப்பு ஏற்பட்டால் LP முள்ளந் தண்டின் நீர் பரிசோதனை அவசியமாகிறது.

முள்ளந்தண்டுப் பாய்மப் பரிசோதனை மூலம் இரண்டு நோய்களுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் இனம் கண்டு கொள்ளலாம். ஆதலால் சரியான மருந்து மாத்திரைகளை வழங்கி நிவாரணங்களை தரலாம். ஏனெனில் சாதாரண காய்ச்சல் வலிப்புக்கும் மூளைக் காய்ச்சல் வலிப்புக்குமான நிவாரணங்கள் வேறுபட்டவை. மூளைக் காய்ச்சலுக்குக் கட்டாயமாக நுண்ணுயிர் நிவாரணங்கள் (Antibiotics) வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கும் போது மூளை காய்ச்சலால் ஏற்படும் வலிப்பும் ஏனைய அறிகுறிகளும் கட்டுப்படுத்தப்படும்.

### EEG பரிசோதனை

இது சாதாரண பிள்ளைகளுக்கும், நரம்பியல் பிரச்சினை இல்லாதவர்களுக்கும், சாதாரண விருத்திப்படி நிலையுள்ள (Neurologi cally and Developme ntally Normal Children) செய்யத் தேவையில்லை.

### இரத்தப் பரிசோதனை

காய்ச்சலுக்கான காரணத்தை அறிவதற்காக இரத்தப்பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. (FBC,CRP,ESR)

### "Neuro Imaging Scan -மூளை ஸ்கேன் பரிசோதனை

இப்பரிசோதனை அவசியம் செய்யவேண்டுமென்பதில்லை. பொதுவாக காய்ச்சல் வலிப்பு வருகின்ற குழந்தைகளுக்கு மூளை ஸ்கேன் பரிசோதனை செய்யும் போது Scan எந்தவித பாதிப்புகளும் இல்லாத சாதாரண நிலையே (Normal) ஸ்கேன் பரிசோதனையில் காணப்படும்.

மேலும் இப்பரிசோதனை செய்வதன் மூலம் இந்த நோய்க்கான நிவாரணத்திலோ அல்லது மருந்து மாத் திரைகளிலோ (Management) எந்த மாற்றமும் வரப்போவதில்லை. ஆனாலும்

இவ்வகையான பரிசோதனைகளால் குழந்தைகளுக்கு கதிர்வீச்சு ஆபத்து இருக்கிறது.

### காய்ச்சல் வலிப்பின் விளைவு

காய்ச்சல் வலிப்பு ஒரு பாரதூரமற்ற வருத்தமாகும். இது ஏற்படும் குழந்தைகளின் வளர்ச்சிப் படிநிலை (Developmental milestones) சாதாரணமாகவே இருக்கும். இதனால் எவ்வித நரம்புப் பிரச்சினைகளோ, மூளைப் பாதிப்புகளோ ஏற்படாது. இது தானாகவே குழந்தைகளுக்கு 06 வயதாகும் போது சரியாகிவிடும். மிகவும் அரிதாகவே 2 வீதமான குழந்தைகளுக்கு பிற்காலத்தில் வலிப்பு நோய் (Unprvoked Seizure/ Epilepsy) வரக்கூடும்.

### காய்ச்சல் வலிப்பு ஏற்படும் குழந்தைகளுக்கான அறிவுரைகளும், முன்னெச்சரிக்கைகளும்

காய்ச்சல் வலிப்பு காய்ச்சலால் ஏற்படுகின்ற 06 மாதத்துக்கும் 06 வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகளுக்கு வரும் ஒரு வலிப்பாகும். இது மூன்றில் ஒரு பங்கினருக்கு மீண்டும் வரும் வாய்ப்புள்ளது. அதனால் காய்ச்சல் வலிப்பு வருகின்றபோது பெற்றோர்கள் பதற்றப்படாமல் குழந்தையின் உடலை இடது பக்கமாக சரித்து (Left Lateral Position) தலையையும், கழுத்தையும் சற்று உயர்த்தி அவதானிக்கவேண்டும்,

வலிப்பு ஏற்பட்டு 2 அல்லது 3 நிமிடத்தைத் தாண்டும்போது அருகிலுள்ள வைத்தியசாலைக்குக் கட்டாயம் எடுத்துச் செல்ல வேண்டும்.



வலிப்பு ஏற்படுகின்ற போது வாயால் எதையும் கொடுக்க வேண்டாம், அதேபோல் காய்ச்சல் நிவாரணிகளையோ அல்லது குழந்தையை ஈரத் துணியால் நனைப்பதை செய்ய வேண்டாம், பிள்ளைக்கு மெல்லிய ஆடைகளை உடுத்துங்கள். பாரமான படுக்கையாடைகளை அகற்றுங்கள்.

தேவையற்ற மருந்துகளை கொடுப்பதை தவிர்ப்பது, போன்ற விடயங்களில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

காய்ச்சலுடன் வலிப்பு ஏற்படும் குழந்தைகளைப் பெற்றோர் மிகவும் அவதானத்துடன் பராமரிக்க வேண்டும். இந்த வலிப்பானது காய்ச்சல் ஏற்பட்ட முதல் 48 மணித்தியாலங்களுக்குள்ளே மட்டுமே ஏற்படும். எனவே குழந்தைக்கு காய்ச்சல் இருப்பது போன்று சந்தேகம் ஏற்பட்டால் சரியானதொரு உடல் வெப்பமானியைப் பாவித்து வெப்பநிலையை அறிந்து கொள்ள வேண்டும். வாய்க்குள் வெப்பமானியை வைத்து அளவிடும்போது சாதாரணமான உடல் வெப்பநிலை 37.5°C (99.5°F) ஆகும், அல்லது குதத்திற்குள் வெப்பமானியை வைத்து அளவிடும்போது சாதாரண வெப்பநிலை 38°C (100.4°F) ஆகும்.

குழந்தைகளின் பெற்றோர்கள் தங்கள் வீடுகளில் முன்னெச்சரிக்கையாக காய்ச்சல் நிவாரணிகளை வைத்துக் கொள்ள வேண்டும் (பாரசிட்டமால் பாணி/சிரப்). குழந்தைக்கு காய்ச்சல் வரப்போகிறது என்று அறியும் வேளைகளில் உடல் வெப்பநிலையைக் குறைத்து காய்ச்சலையும் அதனால் உண்டாகும் வலிப்பையும் தவிர்ப்பதற்கு காய்ச்சல் நிவாரணியை வழங்கலாம் எனவே வலிப்பு வருவதை முன்கூட்டியே தடுத்துக் கொள்ள முடியுமானதாக இருக்கும்.

காய்ச்சல் வலிப்பின்போது ஒரு பிள்ளையின் தோற்றம், பெற்றோருக்கு மிகுந்த பயத்தை ஏற்படுத்தலாம். இருப்பினும் குறுகிய வலிப்புகள் மூளையை சேதப்படுத்துவதோ அல்லது மூளையில் நிரந்தரமான மாற்றங்களை ஏற்படுத்துவதோ இல்லை. அநேகமான காய்ச்சல் வலிப்புகள், நீண்ட நேரத்திற்கு நடப்பதாகத் தோன்றினாலும்கூட சில நிமிடங்கள் மட்டுமே நீடிக்கின்றன. பிள்ளைக்கு நீண்ட நேரம் நீடிக்கும் காய்ச்சல் வலிப்பு ஏற்பட்டால்கூட, மூளை சேதமடையும் அபாயம் குறைவாகவே உள்ளது.

எல்லாக் குழந்தை/ பிள்ளைகளுமே குறிப்பாக இளம் பிள்ளைகள் ஏதோ ஒரு வேளையில் சுகவீனமடையவே செய்கின்றார்கள். குழந்தைகள் காய்ச்சலுக்கு கடுமையான விதத்தில் எதிர் வினையைப் பிரதிபலிக்க கூடியவர்கள். எனவே அதற்கான பாதுகாப்பு நிவாரண

நடவடிக்கைகளை எல்லோரும் மேற்கொள்ள வேண்டும். காய்ச் சலும் வலிப்பும் திடீரென ஆரம்பிக் கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் சிறுவர்கள் ஐந்து வயதுக்குக் குறைவானவர் களாக இருந்தால், அவர் குளிக்கும் போது அருகிலே இருந்து பராமரித் துக் கொள்வது நல்லது. குளியல்த் தொட்டியில் உங்கள் பிள்ளையை தனிமையில் விடுவது பாதுகாப்பற் றதாகும்.அந்த நேரங்களில் வலிப்பு ஏற்பட்டால் பாரதூரமான விளைவுகளில் இருந்து நீங்கிக் கொள்ளலாம்.

காய்ச்சலுடன் ஏற்படும் வலிப்பு என்பது பெற்றோரையும், குடும் பத்தாரையும் பொறுத்தவரையில் மிகவும் பயங்கரமானதும், சவால் மிகுந்ததுமான ஒரு அனுப வமாகும்.

ஆனால் இதன் அடிப்படைக் காரணங்கள் குறித்தும், அது குழந்தையின் மூளை வளர்ச்சியில் மற்றும் செயல் பாட்டில், உடல் வளர்ச்சிப் படிநிலையில் எவ்வித பாதிப்புகளையும் ஏற்படுத்தாது என்ற உண்மையையும் பெற்றோர் விளங்கிக் கொள்ள வேண்டும். ஆதலால் இச்சவாலுக்கு முகங் கொடுத்து சுகம் அடைவதற்கு பெருமளவில் ஒத்தாசையாகவும் இருந்தால் மனரீதியான திருப் தியையும் தரும்.

வலிப்பு ஏற்படும் போது மேற் கொள்ள வேண்டிய முதலுதவிகள் குறித்து அறிந்து வைத்திருப்பது பெற்றோருக்கும், குடும்பத்தா ருக்கும் இன்றியமையாததாகும். மேலும் குறிப்பிட்ட வயதைத் தாண்டிய பின்னர் காய்ச்சலுட னான வலிப்பு ஏற்படக் கூடிய அபாயம் தானாகவே இல்லாது போய்விடும் என்பதும் உண்மை யானதும், பெற்றோரின் அச்சத்தை நீக்கும் விடயமாகும். எனவே காய்ச்சலுடன் ஏற்படும் வலிப் பைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு பெற்றோர் தம் குழந் தைச் செல்வங்களை கண்ணுங் கருத்துமாக பராமரித்தல் குழந்தை களின் ஆரோக்கிய வாழ்க்கைக்கு அவசியமாகிறது.

நன்றி.



# அவள்...

எத்தனை சாதுர்யம்
எத்தனை திறமை
தொடர்ந்தும் தோற்றுத்தான்
போகிறாள் - தோல்வியின்
வாரிசாகவே போகிறாள்

எத்தனை எழுத்துக்கள்
எத்தனை திட்டங்கள்
தீட்டியதையும் தீர்க்காமலே
போகிறாள். - அடைவில்லா
அடையாளமாய் போகிறாள்..

எத்தனை சமரசங்கள்
எத்தனை சமாதானங்கள்
மீண்டும் சண்டையாகவே
போகிறாள் - அறுவடையில்லா
விளைச்சலாய் போகிறாள்

மறுபடியும், எத்தனை சங்கடங்கள்
எத்தனை துரோகங்கள்
தெரியாததுபோல் நகர்ந்தே
போகிறாள் - பின்னும்
புன்னகைத்தே போகிறாள்

எத்தனை விமர்சனங்கள்
எத்தனை விவாதங்கள்
உயிராய் உறவாடவே
போகிறாள் - வீணாய்
விளையாடவே போகிறாள்

ஒற்றை வாழ்க்கையில்
இத்தனை விம்பங்கள்
விந்தையின் விடியலைத்
தேடியே போகிறாளவள்

விடியலற்ற வாழ்க்கையல்ல
இது விடிந்தாலும்
விடைதெரியா வாழ்க்கையிது
இருந்தாலும், அரிய புரிதல்கள்
புனிதமாகிறது - அதுவே
தீர்க்கமான முடிவாகிறது

முயற்சியற்ற திறமை
தோற்றே போகிறது
முறைமையற்ற திட்டம்
தீராமலே போகிறது
முடிவுகளற்ற சமாதானம்
சண்டையாகவே போகிறது

மறுபடியும்,
சங்கடங்களாய் துரோகங்களும்
நகர்ந்தே போகிறது
விமர்சனங்களாய் விவாதங்களும்
உறவாகிப் போகிறது

இப்படியே, அரியதும்
புரிதலுமாய் நகர்கிறாளவள்
மாயாஜால வித்தையாய்
தொடர்கிறது வாழ்க்கை
அவளும் பழகியே போகிறாள்
வித்தைசெய்து - தொடர்ந்தும்
துரத்தியே போகிறது வாழ்க்கையும்
விடை தெரியாமலே
வினாவாகிப் போகிறாள்
அவள்...

**கவியின் வாரிசு**

# புற்றுநோயை குணமாக்கும் எளிய நிவாரணம்

**சடகோபன், சத்திய மங்கலம்**

இந்த வெற்றிகரமான சிகிச்சை முறையைக் கண்டுபிடித்தவர், பிறேஸில் நாட்டைச் சேர்ந்த Romano Zago (ரொமானோ ஸகோ) எனும் தலைசிறந்த மருத்துவரும் பாதிரியாருமாவார்.

இம்மருந்தை உட்கொண்டு, புற்றுநோயால் கடுமையாக பாதிக்கப்பட்டவர்கள் கூட நிவாரணம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த எளிமையான மருந்தைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள்

சோற்றுக் கற்றாழை 400 கிராம்
சுத்தமான தேன் 500 கிராம்
விஸ்கி அல்லது பிராந்தி (whisky or brandy) 50 மில்லி

செய்முறை-

கற்றாழையின் இரு பக்க முட்களை நீக்கி, சுத்தமான ஒரு துணியினால் துடைத்து, மிகச் சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ள வேண்டும். (தோலை நீக்கக் கூடாது) ஒரு பாத்திரத்திலிட்டு, தேன், விஸ்கி அல்லது பிராந்தி சேர்த்துக் கலக்கினால் மருந்து தயார்!

சாப்பிடும் முறை-

தினமும் மூன்று வேளை உணவு உட்கொள்வதற்கு அரை மணிநேரத்துக்கு முன்பாக 15 மி.லீ வீதம் எடுக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் நன்கு குலுக்கி விட்டு பாவிக்க வேண்டும். செய்த மருந்தை பத்து நாட்கள் மட்டுமே சாப்பிட வேண்டும். பிறகு பத்து நாட்கள் இம்மருந்தை எடுக்கக் கூடாது.10 நாட்களின் பின் மீண்டும் தயாரித்து 10 நாட்கள் உட்கொள்ள வேண்டும். நன்கு குணமாகும் வரை பத்து நாட்கள் இடைவெளி விட்டு இம் மருந்தை உட்கொண்டு வர வேண்டும். இந்த மருந்தை பத்து நாட்களுக்கு மேல் சேமிக்கக் கூடாது. இதை காற்றுப் புகாத ஒரு கண்ணாடி போத்தலில் போட்டு, குளிர்சாதனப் பெட்டியிலோ அல்லது அதிக வெப்பம் இல்லாத இடங்களிலோ வைப்பது சிறந்தது.

இடையிடையே மருத்துவ பரிசோதனையையும் மேற்கொண்டு, நன்கு குணமாகும் வரை இம்மருந்தை பத்து நாட்கள் விட்டு மீண்டும் தயாரித்து பயன்படுத்தி வரவேண்டும்.

பலருக்கு குறுகிய காலத்திலேயே நிவாரணம் கிடைத்துள்ள இந்த மருந்து தயாரிக்கவும் எளிது. பலரும் பயன்படுத்தி வெற்றி கண்ட இந்த சக்தி வாய்ந்த அற்புத நிவாரணி பல உயிர்களை காக்க வல்லது.

# ஹைக்கூ

01

அருவியின் அருகே
ஒன்றாக நிற்கின்றன
நான்கு சோடி செருப்புகள்

02

ஆற்றின் ஓரம்
பிறந்து மடிகின்றன
நீர்க்குமிழிகள்

03

ஓடும் நதியில்
உள் நீச்சல் போடுகிறது
பழுத்த ஒற்றை இலை

04

பாயும் அருவி
கும்மாளம் போடுகிறது
குழந்தையின் சிமிக்கி

05

அருவியில் குளியல்
ஒன்றாக கூடுகின்றன
கரு மேகங்கள்

06

அமரும் தும்பிகள்
ஆங்காங்கே தெரிகின்றன
நஞ்சுக்கொடி பொட்டணங்கள்

07

ஒற்றை பாதை
ஒதுங்கி செல்கிறது
மனிதநேயம்

**காவத்தையூர்**
பழனியாண்டி கனகராஜா

# காவியத் தலைவி



தரணி போற்றிடும்
தங்கத் தாமரை
தாமரைக் குளத்தின்
தங்க நிலவு
தித்திக்கும் சுவையின்
திகட்டாத தேன்
தீந்தமிழ் தந்த
பாரதியின் கனவு
துணிந்து நின்று
சுடரும் ஒளி
தூவானம் தொடரும்
மழைச் சாரல்
தென்றல் சுமந்து
வரும் பூவாசம்
தேமதுரத் தமிழின்
இனிய ஓசை
தைரியம் நிறைந்த
தளிரான நடை
தொடரும் கவிதையில்
பூத்திடும் சொற்கள்
தோகையின் வண்ணத்தில்
மின்னிடும் கற்கள்
தௌதிகம் பதித்த
இல்லத்தின் பெண்ணவள்

(தௌதிகம் - முத்து)

**புதுகை ஆதீரா**

# சின்னச் சின்ன பரவசங்கள்

**(ஓர் அனுபவப் பகிர்வு)**

-எஸ் . ஃபாயிஸா அலி-

சில எதிர்பாராத நிகழ்வுகள் நமக்குள் ஏற்படுத்தும் பெருமிதங் களை, நிறைவுகளைப் பகிர்ந்து கொள்வதில் நிறையவே தயக்கங்க ளும் இல்லாமல் இல்லை.

என்றாலும் அதையும் தாண்டிப் பேசியே ஆகவேண்டும் போலிருந்த ஒரு சம்பவத்தை இன்று எதிர் கொள்ள வேண்டியிருந்தது.

கொஞ்சம் அதிகமான பரபரப் போடு பாடசாலையில் இயங்கிக் கொண்டிருந்த வேளை, நான் முன்னர் கற்பித்த பாடசாலையில் இருந்து தொலைபேசி அழைப்பு.

அங்கு தற்போது பிரதி அதிபரா கக் கடமை புரியும் ஆசிரியரே அழைப்பை மேற்கொண்டு, குறித்த ஒரு தகவலை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், இங்கு வந்திருக்கும் தம்பியோடு கொஞ்சம் பேசுங்கள் என்றும் கூறித் தனது தொலைபேசியை இன்னொரு வரிடம் வழங்கி இருந் தார்.



மறுமுனையில் எனக்குப் பரிச்சய மான குரல்.'ரீச்சர் நான் அப்ரி பேசு றேன். எனக்கு யுனிவர்சிடி முடிஞ்சு. இப்ப நான் வெளி நாடு போக ஒழுங்கு செய் திருக்கேன். அங்க ஒரு பள்ளிக்கூடத்தில படிப் பிக்கிற வேலை தான். அதுக்கு எக்ஸ் பீரியன்ஸ் கேட்கிறாங்க.

நான் உங்கட பள்ளிக் கூடத்தில் பதினோராம் வகுப்பிற்கு படிப் பிச்சதானே. அதுக்கு ஆதாரம் வேணும். அதுதான் படிப்பிச்சதை உறுதிப்படுத்திக் கடிதம் ஒண்டு எடுக்க வந்தேன். இங்க எனக்கு தெரிஞ்சவங்க யாரும் இல்லை.' என்கிறார்.

'ஓஹ் அப்படியா மிச்சம் சந் தோசம் தம்பி. நீங்க நல்லா படிப் பிக்கக்கூடிய பிள்ளை. உங்களுக்கு நல்ல எதிர்காலம் இருக்கு. இன்ஷா அல்லாஹ் நல்ல இடத்திற்கு வரு வீங்க.' என்று மனசார வாழ்த்தி விட்டு, பிரதியதிபரிடம் அவர் எமது பாடசாலையில் வந்து கற்பித் தமைக்கான ஆதாரங்களை ஆய்வு கூட அலுமாரியில் வைத்திருப் பதை நினைவூட்டி, அவர் தொடர் பான தகவல்களை உறுதிப் படுத்து கிறேன்.

சுமார் நான்கு வருடங்ளுக்கு முன்னர் எனக்கு கருப்பையில் சத்திரசிகிச்சை ஒன்று மேற் கொள்ளப்பட்டுக் கொஞ்சம் ஓய்வு தேவைப்பட்ட வேளை அது.

சுகவீன விடுமுறை பெற்று வீட்டில் இருந்தாலும், எனக்குப் பொறுப்பாகத் தரப்பட்ட பாடங் களைக் கற்பித்து சிலபஸ் பூரணப்ப டுத்தாவிடில் அது அரச பரீட் சைக்குத் தயாராகும் மாணவரின் அடைவில் எவ்வளவு பெரிய பாதிப்பைக் கொண்டு வரும் என்ப தை நன்கு உணர்ந்த கவலை வேறு மனசை சதா அரித்தபடி இருந்தது.

என்ன மாற்றுவழியைக் கையா ளலாம் என்று கவலையோடு யோசித்துக் கொண்டிருந்த வேளைதான் இந்தத் தம்பி எனக்கு அறிமுகமானார்.

தென்கிழக்குப் பல்கலைக் கழ கத்திற்கு உயிரியல் விஞ்ஞானப் பட்டப்படிப்பிற்குத் தெரிவாகி இருந்தவர், அங்கு போகும்வரை ஊரில் பிரத்தியேக வகுப்புக்கள் செய்து கொண்டிருந்தார்.

'ஏனைய வகுப்புக்களை நான் பார்த்துக் கொள்வேன். நீங்கள் ஒலெவலுக்கு மட்டும் மிகுதிப் பகுதிகளை நிறைவு செய்து, கடந்தகால வினாப் பத்திரங் களையும் முடித்து தாருங்கள்.' என்று நான் கேட்டுக் கொண்ட தற்கு இணங்க அவர் பாடசா லைக்கு வந்து, மிகவும் அழகாக, நேர்த்தியாக அந்தப் பொறுப்பை நிறைவு செய்திருந்தார்.

உண்மையில் அது எனக்குரிய கடமை என்பதால், பிள்ளை களையோ, பாடசாலை நிருவாகத் தையோ சங்கடப் படுத்தாது அவ ருக்கான சிறு கொடுப்பனவு விட யங்களை நானே பொறுப்பேற்று இருந்தேன்.

இரண்டு கிழமை விடுமுறை முடிந்து பாடசாலை வந்தபோ துதான் அவரின் கற்பித்தல் அணுகு முறை, பிள்ளைகளோடு பழகும் பண்பு, அர்ப்பணிப்பு அனைத்தும் பிடித்துப்போக, அதிபரின் அனும

தியோடு அவரின் கற்பித்தலில் இன்னும் கொஞ்சக் காலம் பிள்ளைகள் பயன் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந் தேன்.

குறித்த பாடசாலையில் ஏறத் தாழ ஒன்பது வருடங்கள் பணி புரிந்துள்ளேன். அதிலும் ஏழு வருடங்கள் இன்னொரு விஞ் ஞான ஆசிரியர் கேட்டுப்பெற முடியாத சூழ்நிலையில் ஆறு தொடக்கம் பதினோராம் வகுப்பு வரை நானே கற்பிக்க வேண்டிய சூழ்நிலை.

என்றாலும் இறைவனின் உதவி யோடு சாதாரண தரப் பரீட்சை யில் எமது மாணவர்கள் இதற்கு முன்னரான நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக விஞ்ஞான பாடத் தில் நூறுவீதம் சித்தி பெற்றிருந் தனர்.

இந்தப் பிள்ளைகளின் பெறு பேறுகளும் குறைவின்றி வந்துவிட வேண்டுமே என்ற ஆதங்கம் உண் மையில், இந்த சகோதரரின் உதவி யோடு ஓரளவு பூர்த்தியாகி இருந் தது மட்டுமன்றி, இன்றைக்கு அவ ருக்கு ஒரு வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பத்தையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றது . அல்ஹம்துலில்லாஹ்.

இதேபோலத்தான் வேறொரு பாடசாலையில் என் இளைய மகள் கிடைத்திருந்த காலப்பகுதியில் பிரசவ விடுமுறை நேரம், என்னால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப் பட்டுவிடுமோ என்ற கவலையில் அன்றைய எங்கள் அதிபரிடம் , குறித்த சிறுதொகைப் பணம் கொடுத்து, யாராவது உயர்தரம் விஞ்ஞானம் சித்தியடைந்த பிள்ளை ஒன்றை எடுத்து இந்த நான்கு மாசமும் படிப்பிக்க ஒழுங்கு செய்யுமாறு வேண் டினேன். அவரும் மாணவர்களில் அக்கறையும் புரிந்துணர்வும் கொண்ட நல்ல மனிதர். உடன டியாக அதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

அவ்வாறு கற்பிக்க வந்த ஒரு சகோதரி, அந்தக் கற்பித்தல் அனுப வங்களையும், சந்தர்ப்பத்தையும் கொண்டு இறைவன் உதவி யோடு,இன்றைக்கு ஆசிரியராக நியமனம் பெற்றுக் கற்பிக்கின்றார்.

ஆனாலும்,இந்த இரண்டு சந் தர்ப்பங்ககளிலும் இது தேவையில் லாத மேலதிக வேலை என்ற தோர ணையில் சக தோழமைகள் சிலரின் சின்னச் சின்ன விமர்சனங்களும் எனை நோக்கி எழாமலும் இல்லை

உண்மையில் நாம் நமது கடமை என்று நினைத்து செய்யும் சில விடயங்கள் எதிர்பாராத வித மாக அடுத்தவரின் எதிர்கால முன் னேற்றங்களில் கூட பெரியளவில் பங்களிப்பை வழங்காமல் இல்லை அது மனதளவில் நமக்கு பரவசங்களை ஏற்படுத்தாமலும் இல்லை.. இது ஓர் அனுபவப் பகிர்வு மட்டுமே.

# நான் கவிஞன் அதனால்..

பூவின் வியர்வையை
பனித்துளியாய் இரசிப்பேன்.

பூவையின் கருக்கலைப்பை
பாறைச் சிதைவாய்
நினைப்பேன்.

வானவில்லின் நிறத்தை
வர்ணமாய் தீட்டுவேன்.

அலையின் ஆர்ப்பரிப்பை
ஊஞ்சலாய் வரைவேன்.

மங்கையின் கண்ணீர்த்துளியை
மழைத்துளியாய் பொழிவேன்.

மின்மினியின் வெளிச்சத்தை
மின்விளக்காய் படைப்பேன்.

வீட்டின் ஓட்டையை
விண்மீனாய் வார்ப்பேன்.

துப்பாக்கியின் சீற்றத்தை
துள்ளிசையாய் மொழி பெயர்ப்பேன்.

பறவைகளின் ரீங்காரத்தை
மெல்லிசையாய் மீட்டுவேன்

பூக்களின் மலர்வை
புன்னகை சிதறலாய்
செதுக்குவேன்

மண்ணின் நேயமாய்
மனிதம் விதைப்பேன்.

**றஹீமா இன்ஷார்**
மீராவோடை.

# இன்பமூட்டும் இயற்கை

உயி(ய)ர் தமிழையும்
இயற்கையன்னையின்
பட்டறிவுகளையும்
குழைத்து குழைத்துக்
கட்டுகையில் உருவாகும்
ஹைக்கூத் தொகுப்பு
வெள்ளைமாளிகை
நூலுக்கான அட்டைப்படத்தை
காலத்தோடு நீந்திக்
கூகுள் குளத்தில் தேடுகிறேன்
கிடைக்கவில்லை கிடைக்கவில்லை
வீசும் பாலைவன ஊதக்காற்றை
கட்டியணைத்துக் கொண்டே
வலம் வருகிறேன் பூங்காவில்
மரத்தில் கட்டியிருக்கும்
கயிற்று முடிச்சுகளை
அவிழ்க்க முயற்சிக்கும்
அணில்வள்ளல்
முடிவாகும் அட்டைப்படம்

**ஸ்ரீவி. முத்துவேல்**, துபாய்

# றோணியோக்களின் வளர்ச்சி

# 13

கலை இலக்கியம் என்பது காலத்தால் அழியாதது. அற்புத மானது. மனித வாழ்வில் மிகவும் போற்றத்தக்க அம்சமாக கருதப்ப டுகிறது. உலகளாவிய ரீதியில் நோக்கும் போது உண்மையான கருத்தாகவும், பேசப்பட வேண்டிய ஒன்றாகவும் இருக்கின்றது.

ஒரு மனிதன் அவன் வாழும் காலம் வரை மகிழ்ச்சியாகவும் நோய் அற்றவனாகவும் இருப்பது உசிதம்.

இவ்வாறு மானிட சமூகம் மகிழ்வாக இருப்பதற்கு ஏதோ ஒரு வகையிலே கலை இலக்கியங்களும் காரணமாக இருக்கின்றன. ஆகவே இத்துறையில் ஈடுபடுபவர்கள் நீண் டதோர் வாழ்வு வாழ் கின்றனர். மரணித்தா லும் மண்ணில் பேசப்படு பவர்களாகவே உள்ள னர். இலக்கியம் படைப் போர் சமூக மேம்பாட் டுக்கு பங்குதாரியாக இருப்பது கண்கூடான உண்மையாகும். அன்று முதல் இன்று வரை யாரோ ஒருவர் இலக் கியத்தை வளர்த்துக் கொண்டு தான் இருக்கி றார்கள். அதன்மூலம் சமூகம் சீர்திருத்தம் கண் டுள்ளது இன்று இளம் சமூகத்தினர் எழுத வந்தி ருப்பது மகிழ்வான விடயமே. 1980-90 வரையான காலப்





பகுதியில் இலக்கிய மேம்பாட்டுக்கு அயராது பங்காற்றிய இலக்கியவாதிகளின் படைப்புக்கள் தாராளமாக வெளிவர உதவியதே றோணியோக்கள் என்றால் மிகையாகாது. இன்று உங்கள் இரசனைக்கு எடுத்துக் கொண்ட றோணியோ 'நிறைமதி' சஞ்சிகை ஆகும். அன்றைய கால கட்டத்தில் துடிப்புள்ள மங்கையாய் எல்லாத் துறைகளிலும் மிளிரக் கூடிய வீரப் பெண்ணாய் இருந்தவரே நிறைமதி என்னும் சஞ்சிகைக்கு தாயானவள். நாடறிந்த ஆளுமை அவர் தான் எங்கள் மதிப்புக்குரிய சஞ்சிகையின் ஆசிரியர் மசூரா ஏ. மஜீத் ஆவார்.

'நிறைமதி' றோணியோ சஞ்சிகைக்கு ஆசிரியர் செல்வி. மசூரா ஏ. மஜீத், உதவி ஆசிரியர்கள் செல்வி. மாஜிதா ஏ ஹமீட், செல்வன் ஏ. முரளீதரன் மற்றும் ராதா வேல் முருகு, ஏ.ஸி.எம். வஸீர் , எஸ். ஜே. வாசரன், சிவ கௌரி வேலு, மு. தயானந்தன் ஆகியோர் அங்கத்துவம் வகித்துள்ளனர்.

இது1988/10,11,12 ஆம் மாதங்களுக்குரியதாக வெளிவந் துள்ளது. இருட்டிற்குள் நின்று இருமிப் பார்ப்போருக்கு வெளிச்சம் போட என்ற கோஷத்தோடு அழகிய ஓவியம், பல அர்த்தங்களை தாங்கிய அட்டைப்படம். உள்ளே 'மனக்கதவு திறந்து' எனும் கவிதை காலப் பதிவுகளை நீங்கள் குறித்துக் கொள்ளும் பதிவேடு இது இந்த தேசத்து சிவப்பு நிகழ்வுகளை நிறுத்த முடியாவிட்டாலும், நிறுத்துகிறவர்களுக்கு எத்திவைப் போரை முன்னிறுத்தும் என்று தொடருகிறது கவிதை ஆசிரியர் உரையாக.


மேலும்,

- (காலத்திற்கு வாழ்த்து) – காரைதீவு சபாரெத்தினம்
- (ஹூசைன் ரலியும் கர்பலாக்களமும்)- எஸ்.அரூஷ் ஷரீப்தீன்
- (உனக்கு உரிமை இருக்கிறது) களுவாஞ்சிக்குடி மனோ
- (இதயத்தில் இடமில்லை) -மாஜிதா அப்துல் ஹமீத்,
- (பார.....தீ)-மருதூர் றிஸ்மி மஜீட்.
- (தூண்டல்)-நிஸாம். ஏ.மஜீத்
- (பட்டமது பெற்றென்ன)-இரா இராஜேஸ்வரன்
- (கரங்களைக் கோர்த்து)-செல்வி. மசூறா.ஏ. மஜீட்

- (அகிலம் புகழ வாழ் வோமே)-பாலமுனை ஆதம்
- (தீப் பிளம்பாகப் பாயட்டும்)-கலைச் சிற்பி
- (அழைப்புரை)-ஆஸாத்.எம். ஹனிபா
- (திருத்தப்படவேண்டிய தீர்ப்புக்கள)-திக்வெல்லை ரதீமா
- (சினேகி)-நிலாவாசன்
- (மயான அமைதி)-கோவை அன்வர்
- (தியாகிகள்)-மருதமுனை அமுதநேசன்
- (கேள்விக்குறி) மருதமுனை எம்.எச்.ஏ. கரீம்
- (கல்வியால் சிறக்கும் கன்னியர் வாழ்வு) - மருதூர் ஜமால்தீன்,
- (எதிர்பார்ப்புக்கள்)-ஜேம்ஸ்

*போன்றோர் அழகிய படைப் புக்களை தந்துள்ளனர்.*

*இப்போது இரண்டாவது இதழுக்கு வருவோம்.*



*1988.12.22 சித்திரை வெளியீ டாக, முகப்பு அட்டை தாமரைப் பூவோடு படைப்புக்கள் பூத்துள் ளது. உள்ளே..*


- (வரவேற்பு பாடுங்கள்)- ஆர். எம். நௌஸாத்
- ஆசியுரை . ஜி. மறைமுதல்வன் (இலங்கை வானொலி அறிவிப்பாளர்),
- அணிந்துரை. புலவர் ஈழ மேகம் ,
- (பாரபட்சம்)- ஆர். எம். நௌஸாத்.
- புண்பட்ட நெஞ்சம்-எஸ். சிவா செல்லையா நாவலப்பிட்டி,
- (துணிந்த பின் மனமே)- நிந்தவூர் நஸீலா இப்ராஹீம்,
- (பரிதவிக்கும் உள்ளங்களும் பலியாகும் நெஞ்சங்களும்)-செல்வி காமினி சுப்பிரமணியம் யாழ்ப்பாண
- (மனம் மாறுகிறாள் ராதா)-சிறுகதை-சம்மாந்துறை கிருபாஹரி வேல்முருக ,
- அறிவுத்துளிகள் தொகுப்பு-ஏ.எம். அப்துல் நிலாம் சம்மாந்துை
- ஆசிய விளையாட்டுப் போட்டி-நவாஸ்.ஏ. மஜீட்- அக்குரணை
- (தாய் தந்தைப் பேண்) கட்டுரை-.எம்.ஐ உம்மு அமீமா- நிந்தவூர் ,
- (வாழ்வு மலர்ந்துவிடு)-ரூபராணி,
- (பாத அணி) .என்.எம்.றாபீக்-சாய்ந்தமருது
- (வேண்டும்)- செல்வி சந்திரா பசறை
- (ஓய்வின் அவசியம்) கட்டுரை-ஆசிரியர்
- (நினைவிலே மனைவி என்று)சிறுகதை எம் ஸீயே பரீத்,
- (நிறைமதி பதில்கள்) - S.H .நபீஸத்துல் மிஸிரியா மாளிகைக்காடு,

- (அவளைக் காண்பதற்கு)- ஏ.ஏ.றஹீம் சம்மாந்துறை,
- (போட்டிக்கதை)-சபீனா பானு அஹமட் நிந்தவூர்,
- (மனித உரிமைக்கு மாண்பளித்த இஸ்லாம்)-சம்மாந்துறை. எம்.எம்.றிபா
- (பூத்தான் உதிரவில்லை) சிறுகதை சம்மாந்துறை செல்வி.மசூறா.ஏ.மஜீத்,
- (விளையும்) -சந்திரா இரங்கசாமி பசறை, சிறுகதைப் போட்டி-ஆசிரியர்
- (இதயத்தால் வற்றவில்லையே)கதை- மு.தயாளன் சம்மாந்துறை, ,கருத்தரங்கு-
- (அழிவு சக்திக்கு காரணம்.ஆண்களா? பெண்களா? )-தயாரிப்பு எட்டியாந்தோட்டை வீ.சிவகௌரி, ஸ்ரீஞானந்த சுவாமிகளின் அருள் மொழிகள்,
- (ஏழைகளும் சுவர்க்கம் புகுதலும்) ஹதீஸ்-நிந்தவூர் எம்.ஐ.உஸனார் சலீம்,

ஆகியோர்களின் அழகிய படைப்புக்களைக் கொண்டு நிரப்ப் பட்டுள்ள நிறைமதி நிறைவான றோணியோ சஞ்சிகையாக, சமூகத்துக்கு ஒளி பாய்ச்சியுள்ளது.

மீண்டுமொரு றோணியோவுடன் சந்திப்போம்.

**எஸ்.யூ. கமர்ஜான்பீபீ**
(J.P) S L.P.C.
*வத்தளை*





**சிறுகதை**

# லப்டப் லப்டப்

மஞ்சு ஒரு சாதாரண குடும்பப் பெண். கடவுள் மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்டவள். தாய்க்கு ஒரே மகள் அவள். திருமணம் முடித்து நீண்ட காலம் ஆகியும் குழந்தை கிடைக்கவில்லை அவளுக்கு. பல காலமாக தமக்கு குழந்தை இல்லையே என்ற ஏக்கமும், ஏமாற்றமும், உறவுகளின் ஏளனமும் அவளை உறுத்திக் கொண்டே இருந்தது. அவள் ஏறாத கோவிலும் இல்லை. வணங்காத சாமியும் இல்லை. பார்க்காத வைத்தியமும் இல்லை. என்ன செய்வது காலத் தையே நொந்தபடி காலங்களுமே ஓடின.

மஞ்சுவின் கணவன் வீமன். அவன் ஏழை விவசாயி. வசதியான வாழ்க்கை அவனிடம் இல்லை. சேற்றிலே காலூன்றினால் தான் வீட்டில் சோற்றில் கையை வைக்கலாம் என்பது அவர்களது நிலை. அவர்களின் ஜீவனமே அதுதான்.

இளவெயில் நேரத்தில் குடத்துடன் ஆற்றங்கரை பக்கமாக போன மஞ்சுவுக்கு இலேசான தலைசுற்றல் ஏற்படவே அவள் ஒரு நாவல் மரத் தடியில் உட்கார்ந்தபடி சாய்ந்தாள். இதை அவ்வழியால் வந்த தோழி தேவியும் அவள் இருக்கும் இடத்திற்கு வேகமாக வந்தாள். நடந்ததை சொன்னாள் மஞ்சு. அதற்கு தேவி 'கவலையை விடு! இரண்டாம் கட்டை இன் னும் கொஞ்சத் தூரத்தில் இருக்கு. அங்கு புளிய மரத்தடி கங்காணி இருக்கிறாரு. அவரிடம் போய் சொல்லுவோம்' என கூறி மெது வாக கூட்டி வந்தாள் தேவி.

புளியமரத்தடி கங்காணியிடம் நடந்ததை கூறினாள் தேவி. அப் போது சர்க்கரை நோயுள்ளதோ என பரிசோதிப்பதற்காக சிறுநீரை கொண்டு வரும்படி மஞ்சுவிடம் கூற அதை கொண்டுவந்து கொடுத் தாள். சற்று அமரும்படி புளியமரத் தடி கங்காணி பரிசோதனை செய் யும் போது அவளுக்கு சர்க்கரை இல்லை, அவள் மாசமாக இருக்கி றாள் என்பது தெரியவந்தது

அவளை அழைத்து அவர் கூறினார் 'அம்மாடி நீ கர்ப்பமாக இருக் கிறாய். இப்படியெல்லாம் பாரமானதையெல்லாம் தூக்க வேண் டாம். நீ முதல்ல வீட்ட போ'என கூறிவிட்டு தனக்குரிய பணத் தையும் வாங்கிக்கொண்டு அனுப்பி வைத்தார் அந்த கங்காணி.

இன்பத்தில் இருந்த மஞ்சு முதலில் கணவரிடம் சொல்லும் முன் கோவிலுக்கு போய் அர்ச்சனை செய்த பின் தன்னுடைய வீட்டுக்கு வந்தாள். தன் கணவரிடம் தான் கர்ப்பமாக இருப்பதாக கூறி பேரானந்தம் அடைந்தாள்

ஒன்பது மாதமும் முறையான வைத்திய ஆலோசனையையும் பின்பற்றினாள் மஞ்சு. அவளுக்கு ஒருநாள் திடீரென இடுப்புவலி ஏற்பட்டது. டவுனில் உள்ள பெரிய ஆஸ்பத்திரி சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்க, அந்த மருத்துவமனைக்கு தன் கணவனுடன் போய்ச் சேர்ந்தாள்.

அன்று இரவு ஒன்பது மணி அளவில் அவளுக்கு பெரிய போராட்டத்தின் பின்னே ஆண் குழந்தை கிடைத்தது.

அளவில்லா அன்பும் ஆசை யையும் கொண்டிருந்த அவளிடம் குழந்தையை காட்டாமலே கொண்டு போய் விட்டார்கள் தாதி யர். சிறு நேர மயக்கதின் பின்னர் தன் குழந்தைப் பற்றி கண வனிடம் கேட்டாள். அதற்கு அவனால் எது வும் பேச முடியாமல் வாயடைத் துப் போனான். கண்ணீர் மட்டுமே மீதமாக இருந்தது அவனிடம். மஞ்சு சப்தம் போட்டு கதறினாள். தாதிமார்களிடம் தன் குழந்தைக்கு என்ன ஆனது என பொறுமையை இழந்தவளாக கேட்டாள்.

அதற்கு தாதியர் 'உங்க குழந்தை வயிற்றில் இருக்கும் போதே இறந்தே பிறந்தது' என்றனர் 'எங்க ளால் ஒன்றும் செய்ய முடிய வில்லை' என்று கவலையுடன் கூறி னர் தாதியர். இடிவிழுந்தவளாய் ஓலமிட்டு கதறினாள். 'காத்தி ருந்தும் பலனற்றுப்போ யிட்டே' என விம்மி விம்மி அழுதாள்.

அவளுக்கு கடவுளின் மீதும் கோபம் வந்தது. கண்டபடி பேசி னாள். தன் கணவரிடம் தன் குழந் தையை ஒரே ஒரு தரமாவது பார்க்க வேண்டும் என கூறி அழு தாள். கணவனும் அவளது ஆசையை தாதிமாரிடம் கூற அக் குழந்தையை அவளிடம் கொடுத் தனர். தன் குழந்தையை நெஞ்சிலே அணைத்தபடி வீறிட்டு கத்தினாள். ஆசை தீர முத்தமும் கொடுத்தாள்.



சில நொடிப் பொழுதில்...

தன் குழந்தையின் இதயத் துடிப்பு 'லப்டப் லப்டப்' என அவ ளுக்கு கேட்டது தன்னுடைய இத யத்துடிப்போ இது என எண்ணி தன் குழந்தையை சற்று மேலே தூக் கினாள். குழந்தை சுவாசிக்க ஆயத்தம் ஆகுவதை கண்ட அவள் 'டொக்டர் டொக்டர்' என சப்த மாக அழைத்தாள்.

அறைக்குள் இருந்த டொக்ட ரும் தாதியரும் வேகமாக மஞ்சுவி டம் வந்தார்கள். தன் குழந்தையின் இதயத்துடிப்பு தனக்கு கேட்பதாக கூறினாள். பரிசோதனை செய்த டொக்டரும் குழந்தையின் இதயம் துடிக்கும் நற்செய்தியை சொன் னார். சற்று நேரத்தின் பின் அக் குழந்தையின் விரல்கள் உசும்பத் தொடங்கின. ஆனந்தம் அடைந்த டொக்டர் கூறினார் 'வைத்தி யத்தை மிஞ்சிட்டு மஞ்சுவின் தாய் பாசம்' என அவளின் தோளைத் தட்டிக் கொடுத்த டொக்டர்கள் வாழ்த்துக்கள் கூறிச் சென்றனர்.

உணர்வுக்கும் உயிருக்கும் இடையில் ஊசலாடும் உறவு ஒன்று உண்டு என்றால் அது தாயாகத் தான் இருக்க முடியும்.

**மீராநகர் றிப்கா.**
நிந்தவூர்.



# வாசிப்பை நேசி...

வீட்டுக்கு வெளிச்சம்
சாளரத்தின் ஊடே
அறிவுக்கு வெளிச்சம்
வாசிக்கும் நூலே
சொல்லாத இன்பம்
பொங்கிடும் வீடே
நுண்ணறிவும் நூலறிவும்
எழுந்திடும் மேலே

பாரதியும் ஔவையும்
காட்டிட்ட இன்பங்கள்
கண் மறைந்து போகும்
கைதிசை மாறிட
இணைய வழி தேடும்
முகநூலும் மின்னூலும்
கைவழி சேரும்

வழக்கொழிந்து வரும்
வளமான மாற்றங்கள்-
அதில் சிறகடித்து பறந்து
சிதையும் ஏற்றங்கள்
தனித்துவக் கல்வியும்
மங்கும் வாழ்வினில் - அவை
சிந்திட சிதறிட
சிந்தைகள் ஏங்கும்

புத்தகப் பெறுமதியைப்
புதைக்கும் இக்காலம்
கவிஞர்களின் படைப்பெல்லாம்
கரைந்திடும் கோலம்
இயன்றிடும் எழுத்தாளன்
எழுகிறான் அன்பில்
புதையுண்ட புனிதங்கள்
மங்கிப் போகும் மண்ணில்

ஆறறிவை வளர்த்திடவே
அரும்பெரும் தேவையிது
நூலெடுத்து விரித்திடவே
நூறாகிப் பெருகும் பொதுஅறிவு
போர் கொண்டு சாய்த்தாலும்
வீழாத மனமது
ஆராய்ந்து கற்கும் போது
ஆறிடா சுவையது
அறிவியல் மாறினாலும்
அழகியல் கூடினாலும்
ஆற்றல்கள் ஓய்ந்திடுமோ-
இனியுமொரு
நூலகம் எரிந்திடுமோ

பக்கம் பக்கமாய்
பகிர்ந்திடும் உணர்வுகள்
மனம் தொட்டுக் கலைகள்
பேசிடும் நூல்கள்
வீசிடும் இணையத்தின்
ஒளிக்கீற்றில் இவைதான்
மடிந்திடுமா என்ன?

வாசிக்காமல் யார்க்கும்
வந்ததில்லை அறிவு
இதை நேசிக்காமல் போனால்
வளர்ச்சிக்கே முறிவு
பொது அறிவு பெற்றிடவே
எப்பொழுதும் நீ வாசி
அறிவுள்ள புத்தகம்
அத்தனையும் நீ நேசி

**றினத் றாசிக்**
நிந்தவூர்



# வளர் இளம் பருவத்துப் பெண்களும் பெற்றோரின் சரியான வழிகாட்டலும்

அன்னையர் தினம் கொண்டாடப்படும் இந்த நேரத்தில் வரலாறு பேசும் மகத்தான அன்னையர்கள் பற்றியும், அவர்களின் மகத்தான சேவைகள் தியாகங்கள் பற்றியும் பரவலாக எல்லா இடங்களிலும் பேசக்கூடியதையும், அன்னையர்களின் பெருமையை உணர்த்தும் கதை, கவிதை என வாசித்து பாராட்டிக் கொண்டிருப்பதையும் காண்கின்றோம் . உண்மையிலேயே இது மிகவும் மனதிற்கு இதமான செயல் தான். இவ்வுலகில் அன்னயைப் பிடிக்காதார் யார் தான் உளர்.

நாமும் இந்த அன்னையர் தினத்திலாவது வரலாற்றுத் தாய்மார்களையும் சரி, இன்றைய நடப்பிலுமுள்ள தாய்மார்களையும் சரி அவர்களின் தியாகங்கள் , வாழ்வியல் சிறப்புக்கள் அத்தனையும் நம் இளைய சமுதாயத்திற்கும் கொஞ்சம் கற்றுக் கொடுப்போம். இன்றைய இளைய சமுதாயமான டீன்ஏஜ் பெண்கள் தான் நாளைய தாய்மார்களாக மிளிரப்போகிறவர்கள்.

இன்றைய சமுதாய அமைப்பில் மிகவும் கவனம் செலுத்தக்கூடிய இடத்தில் இருக்கும் டீன்ஏஜ் பெண்களை சிறந்த முறையில் வழி நடத்தி, சமுதாயத்திற்கான சிறந்த அன்னையர்களாக உருவாக்குவது நமது சமூகத்தின் இன்றைய தேவையாக இருக்கின்றது. கத்தி மேல் நடக்கும் பருவம் இந்த டீன் ஏஜ் பருவம் என்பார்கள். இந்தப் பருவத்திலேதான் பிள்ளைகள் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. வெற்றியுடன் இப்பருவத்தை கடந்தவர்கள் நிச்சயமாக நல்ல நிலையை அடைவர்.

சுமார் பதிமூன்று வயது தொடக்கம் பத்தொன்பது வயது வரையுள்ள இளம் பருவத்தினர் 'வளர் இளம் பருவத்தினர்' (டீன் ஏஜ் பருவத்தினர்) என அழைக்கப் படுகின்றனர்.

இவர்களை வளர்ந்தவர் பட்டியலில் சேர்க்கவும் முடியாது. ஆனால் வளர்ந்தவர்கள் என்ற எண்ணம் செயற்பாடுகள் இவர்களிடம் காணப்படும். இவர்களை சிறுவர்கள் பட்டியலில் சேர்க்கவும்

முடியாது. வளர்ந்த தன்மை இவர்கள் உள்ளத்தில், உடலில்,இருந்தாலும் இவர்கள் குழந்தைத்தனமாக இருக்கவே அதிகம் விரும்புவர்.

உடல் உள மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்து விடும் முக்கியமான பருவம் இதுதான். அதிகமாக இந்த வயதினரை சொல் பேச்சுக் கேட்காத வயது என திட்டுவோர் நம் மத்தியில் அதிகம்.

இவர்களுக்கான விசேட குணம் என்னவெனில், மனதில் பட்டாம் பூச்சிகள் பறக்க ஆரம்பித்து விடும். வாழ்க்கையில் எதையோ சாதிக்கப் போகின்றோம் என்ற தேடல் இங்கிருந்துதான் ஆரம்பமாகின்றது என்கின்றனர் உளவியலாளர்கள்.

சில பிள்ளைகள் பக்குவம் அடைய ஆரம்பிப்பர். சில நேரம் மனக்குழப்பத்திற்கும் ஆளாகி விடுவர். இந்த நேரம் பெற்றோர், பாதுகாவலரின் அரவணைப்பு, கண்காணிப்பு மிக முக்கியமான தொன்றாகும்.

'அட நம்ம பெண் இப்போது குட்டிப்பெண்ணாக இருந்தாளே! திடு திப்பென்று வளர்ந்து நிற்கின்றாளே' என ஆச்சரியத் தோடு பார்க்கும் பருவமிது. இதற்குக் காரணம் இவர்களின் உடல் அங்க வளர்ச்சி மாற்றம். இனத் தூண்டல், பால் கவர்ச்சி, தன்னை அழகாக காட்ட விரும்புவது, என்பன இவர்களின் இயல்பு.

இந்த கால கட்டத்தில் தான் எலும்புகள் வலுப்பெற்று, முழுமையாக வளர்ச்சி பெறுகின்றன. உடல் எடை உயரம் அதிகரித்தல் இக்காலத்துக்கே உரிய பருவ மாற்றமாகும்.

இந்த பருவம் தான் நம்குழந்தைகள் தடுமாறி வழிதவறுவதற்கான பருவம். இந்த கால கட்டத்தில் தான் பெற்றவர்களும், ஆசிரியர்களும் இவர்களைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள்.

இவர்களிடம் எதுவும் பேச முடியாது. பயமாக உள்ளது. உடனே எதிரியாக பாவித்து வார்த்தைப் பிரயோகங்களை விடுவதும். முரண்படுவதும் பிழையான நட்புகொள்வதும் என பெற்றோர் அங்கலாய்க்கின்றனர் .

சரி இந்தப் பருவத்தினரின் பிரச்சினைதான் என்ன? ஏன் இந்த முரண்பாடு. அவர்களிடமே கேட்டு விடுவோமே என நான்கு டீன்ஏஜ் பெண்களை கண்டு பேசிய போது அடேங்கப்பா! அவர்கள் அறிவுத்திறன் பேச்சு எல்லாமே நம்மை வியக்க வைக்கின்றன. சமூக விடயங்கள் கூட இவர்களுக்கு அத்துப் படி. அவர்களிடம் சில விஷயங்களைப் பேசியவாறே மெதுவாக ஏன் சில சமயங்களில் உங்கள் பெற்றோரையும் ஆசிரியர்களையும் எதிரியாக நினைத்து அவர்களிடம் முரண்படுகிறீர்கள். எனக்கேட்டபோது, அவர்களின் பதில் ஆச்சரியப்பட

வைத்தது. 'யார் சொன்னது?? அவர்கள் எதிரிகள் என்று. ஐ லவ் மை பேரண்ட்ஸ். 'ஐ ரெஸ்பெக்ட் மை டீச்சர்ஸ்'. என அவர்கள் கோரஸாக கூறிய போது அவர்களின் கண்களில் தெரிந்த உண்மைத்தன்மையும், கனிவும் ஆச்சரியமாக இருந்தது.

'அப்ப சரி! உங்களுக்கு அவர்களுடன் என்னதான் முரண்பாடு' எனக் கேட்டபோது அவர்கள் பதில் பெற்றோராகிய நாம் யோசிக்க வேண்டிய விடயம் தான்.

வீட்டில் அன்பாக எதையும் கண்டுக்காமல் எங்க பாட்டுக்கு எங்களை விட்டு இருந்த பெற்றோர் .திடீரென 'அதைச்செய் ,இதைச் செய்' என ஓடர் போடுவதுடன் 'எருமை மாட்டுக்கணக்கா வளந்திருக்காய் எதையும் சரியா கச் செய்வதில்லை என்கிறார்கள். இது பிடிக்கல்ல. நாங்கள் என்ன மிலிட்டிரியிலா இருக்கிறோம். எங்கள் வீட்டில்தானே! கொஞ்சம் ஃபிரீயா தான் விடுங்களேன்' என்கிறார்கள்.

'இவங்களோட பழகு! அவங்களோட பழகு என திணிப்பது பிடிக்கல்ல. பிடிச்சா நாங்களே பழக மாட்டோமா? நாங்கள் பழகுபவர்களை உண்மை அறியாமல் பிழையாக சுட்டிக் காட்டி.. இவர்களுடன் சேர்ந்து நாசமாகிவிடுவாய் என கட்டுப்படுத்துவது பிடிக்கல்ல. நல்லமுறையில் அன்பாக எடுத்துச் சொன்னால் புரிந்து கொள்வோம். நேரத்துக்கு அவர்



கள் செய்யாமல் எங்களை மாத்திரம் விரட்டுவது நேரத்துக்கு தொழு, ஓது என்று.. எங்களை விரட்டுவது அவர்கள் விரும்பிய நேரத்திற்கு செய்வது இவை பிடிக்கல', 'எல்லோரும் ஒன்றாக சாப்பிடும் வேளையில் தான் படிப்பு சம்பந்தமான குறைகளைத் தூக்கிப் போட்டு மெல்வது. கூடச் சாப்பிடாதே குண்டாகி விடுவாய். பின்னே திருமணம் முடிப்பதில் சிரமம் என கடுப்பேத்துவது அறவே பிடிக்கல. இதெல்லாம் உண்மையாக இருந்தாலும் சாப்பாட்டு மேசையில் சந்தோசமான விடயங்கள் பேசலாமே!' என்கிறார்கள்.

'சரி! ஆசிரியர்கள்.....' என்றேன். 'எல்லாரையும் பிடிக்கும், சில ஆசிரியர்களும் பெற்றவர்களும் முன்னர் நடந்து முடிந்த கசப்பான சம்பவங்களை மீட்டி எப்போதும் நீ அப்படித்தானே என குத்திக் காட்டி பேசுவது அறவே பிடிக்கல்ல. எங்களுக்கு முன்னே மற்ற சகாக்களை புகழ்ந்து தள்ளுவது பிடிக்கல்ல.

எங்களையும் புரிந்து நடக்கலாமே!' என்கிறார்கள்.

'சரி என்னவெல்லாம் பிடிக்கும்' என்ற கேள்விக்கு அவர்களின் பதில் மிகவும் கொஞ்சமே!' வேலை வேலை என எங்களை தனிமைப்படுத்தாமல் எங்களோடு ஒருவராவது இருப்பது, நீ வளர்ந்து விட்டாய் என ஒதுக்காமல் அப்பப்ப விடுமுறை தினங்களில் வெளியே கூட்டிச்செல்வது, விளையாடுவது, உறவினர்களிடம் செல்வது , சின்ன சின்ன சுற்றுலாக்கள். அவர்கள் முன்னிலையில் கொஞ்சம், டீவி, போன் அப்பப்போ பார்க்க விடுவது இவ்வளவு தான்' என்கிறார்கள். அந்த இளசுகள்.

டீன் ஏஜ் இளம் வளர் பருவத்தினர் மிகவும் எமோஷனல் என்பதை நன்கு புரிந்து கொண்டு அவர்களை வழி நடத்துமிடத்து அங்கே ஏது முரண்பாடு.? பிள்ளைகள் தவறு செய்வதைக் கண்டால், அவர்களை அன்பான முறையில் சுட்டிக் காட்டி அதனால் ஏற்படும் விபரீத முடிவுகளை எடுத்துச்சொல்லி புரிய வைக்கலாம். அவர்களை எந்த சந்தர்ப்பத்திலும் சந்தேகக்கண் கொண்டு பார்க்காதீர்கள்! அவர்கள் நம் செல்வங்கள் நாளைய அழகிய சமுதாயத்தைத் தோற்றுவிக்கக் காத்திருக்கும் சிறந்த அன்னையர்கள்.

இதைத்தான் நமது மார்க்கமும் வலியுறுத்துகின்றது.' இந்தப் பெண் பிள்ளைகளில் சிலர் மூலமாக ஒருவர் சோதிக்கப்படுவாரேயானால் அவரை, அவர்கள் நரகிலிலிருந்து காக்கும் கேடயமாக இருப்பார்கள். (புஹாரி முஸ்லீம்)

'பெண் பிள்ளைகளைப் பருவம் அடையும் வரை பராமரிக்கும் அவரும் நானும் இவ்வாறு இருப்போம் .' நபி (ஸல்)அவர்கள் தனது இரு விரல்களை சேர்த்து அசைத்துக் காட்டினார்கள். (முஸ்லிம்)

மேலும் இறுதி ஹஜ்ஜின் போது 'பெண்கள் விடயத்தில அல்லாஹ்வைப் பயந்து கொள்ளுங்கள்' எனவும் கூறினார்கள்.


ஆகவே ஒவ்வோர் பெற்றோரும், பாதுகாவலரும் பெண் பிள்ளைகளின் கல்வி, ஒழுக்கம், பாதுகாப்பு, உயர்ந்த பண்பாடுகள் போன்றவற்றில் மிகவும் அவதானத்துடன் கவனம் செலுத்துமிடத்து அவர்களும் அதனை உரிய முறையில் விளங்கி சீரிய பாதையில் செல்லுமிடத்து, பெரும் சாதனையாளர்களாக மாறி சிறந்த சமுதாயத்தைச் தோற்றுவிக்கும் அன்னையர் வரிசையில் இடம் பிடிப்பார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**ஏ,எஸ் சித்தி மிஸ்ரியா அமீன்**
**கிண்ணியா**



நூல் மதிப்புரை

# விழியீர்ப்பு விசை




நல்ல புத்தகங்கள் இனிய தோழமை உணர்வை பரிசளிக்கும். கலங்கிய இதயத்தை தெளிவு படுத்தும் ஆசானாக, ஐயம் தீர்க்கும் வழிகாட்டியாக, தனிமைக்கு உற்ற நண்பனாக நல்ல புத்தகங்கள் துணை நிற்கும்.

**புத்தகங்கள் இல்லையென்றால்**
**சரித்திரம் மௌனமாகிவிடும்**
**இலக்கியம் ஊமையாகிவிடும்!**

நம்மை நமக்கே அறிமுக படுத்தி சிந்திக்க வைத்து இதயங்களை தெளிவு படுத்தும் ஆளுமை புத்தகங்களுக்கு மட்டுமே சாத்தியம். அந்தவகையில் என்னை ஈர்த்த ஒரு நூல் தபுசங்கரின் விழி ஈர்ப்பு விசையாகும். கவிஞரின் எதார்த்த வார்த்தைகள் வாசகர்களின் இதயத்தை துளைத்து ஒய்யாரமாய் அனுமதியின்றி உட்கார்ந்து கொள்கிறது .

இப்புத்தகத்தின் பக்கங்களை புரட்டும் ஒவ்வொருவருக்கும் காதல் புரட்டிப் போடும். காதல் வாசம் அற்றவர் கூட காதலைத் தேடி அலைவார் என்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

எளிய நடையில் இதயங்களை வளைக்கும் கவி

**சூரியன் வந்த பிறகுதான்**
**நீ வருகிறாய் என்றாலும்**
**நீ வரும்போது தான்**
**விழிக்கிறது இந்த வீதி!**

எதார்த்தமான நிகழ்வை எத்துணை அழகாய் மெருகேற்றுகிறார் கவிஞர்! பொதுவாக கவி என்றால் எதுகை மோனை சொற்கள் வந்து ஒட்டிக்கொள்ளும் . நம் கவிஞர்க்கு அப்படி ஏதும் பிரத்தியேக வார்த்தைகள் தேவைப்படவில்லை. இயல்பான வார்த்தைகளிலேயே இதயங்களை கட்டி வளைத்துவிடுகிறார்.

காதல் தேவதைகளுக்கான

பரிசு இந்நூல். காதலை வெளிப்படுத்த உகந்த பரிசு பெட்டகம் இந்த விழி ஈர்ப்பு விசை வாசிக்கும் அனைவருக்கும் காதல் வெள்ளம் கரை புரண்டோடும்.

தொலைபேசியில் எல்லாம்
நீ எனக்கு முத்தம் தராதே
அது உன் முத்தத்தை
எடுத்துக்கொண்டு
வெறும் சத்தத்தை மட்டுமே
எனக்கு தருகிறது!

காதலில் திளைத்து இதயங்களை தொலைத்து கனவுலகில் மிதந்து இன்பக்கடலில் மூழ்கிட விழி ஈர்ப்பு விசையை நோக்கி பயணியுங்கள்.

காதலில் வெற்றி கனியை ருசிப்பது காதலியா இல்லை கவிதைகளா என்ற பனிப்போரில் நம்மை திக்குமுக்காட வைக்கிறார் நம் கவிஞர்.

உன்னை ஏன்
இப்படி காதலித்து
தொலைக்கிறேன்
அடிக்கிற அம்மாவின்
கால்களையே கட்டிக்கொண்டு
அழுகிற குழந்தை மாதிரி!

முக்காலம் பறைசாற்ற நம் தமிழன்னை கொடுத்த பரிசு மொழி. எல்லா துறைகளிலும் சிறந்த வல்லுநர்கள் அவர்களின் அனுபவங்களை பதிவு செய்து வருங்கால சமுதாயத்தின் வழிகாட்டியாக விளங்க புத்தகங்கள் வழி வகுக்கின்றன. அவ்வகையில் தபுசங்கரின் இந்த நூலும் காதலின் வழிகாட்டியாகத் திகழ்கிறது.

2018 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி, விஜயா பதிப்பக வெளியீடாக வெளிவந்த இந்த நூல் 95 பக்கங்களுடன் இலக்கிய வானில் சஞ்சரிக்கத் தொடங்கியுள்ளது. விலை இந்திய ரூபாய் 40/= ஆகும்.

வாழ்க தமிழ் !!!
வளர்க தமிழ் !!!



சூர்யா :பா

# இழந்ததை மறந்து விடு

இழந்ததை மறந்துவிடு
இத்தனை வலிக்கு பின்பும்
இரும்பு போன்ற மனமிருக்கு
இத்தனை தோல்வியை பார்த்த பின்பும்
முயற்சி கொண்டு
முன்னேற துடிக்கும்
வேகம் கொண்ட
மனம் உனக்கு
இத்தனை சோகத்தையும் மறைத்து
மகிழ்ச்சியை மட்டும்
காட்டும் துணிவு உனக்கு
இத்தனையும் நடந்த பின்பும்
துணிச்சலை கொண்ட
மனம் உனக்கு
இத்தனை வைராக்கியம் கொண்டவள்
இழந்ததை எண்ணி
எதற்கு நீ கண்ணீர் வடிக்கிறாய்
இழந்ததை நீயும் மறந்துவிடு
உனக்கான கனவோடு
நீயும் உறவாடு!

-பூமணி-

# ‘கலாபூஷணம்’ இஸ்மாலிகா ராஜா

இவ்விதழின் அட்டைப் படத்தை அலங்கரிக்கும் ஆளுமையாக ‘கலாபூஷணம் இஸ்மாலிகா ராஜா’

நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த ரம்பொடை என்னும் அழகிய கிராமத்தில், சேகு தாவூத்- சித்தி ரஷீதா தம்பதியினருக்கு மூத்த மகளாகப் பிறந்த இவருக்கு சகோதர சகோதரிகள் ஏழு பேராவர்.

புசல்லாவையில் உள்ள பெருமை பெற்ற பரிசுத்த கிருத்துவக் கல்லூரியில் கல்வி கற்றவர். அங்கு இவருக்குத்

தமிழ் ஆசானாக இருந்த இணுவிலைச் சேர்ந்த பண்டிதர் சா. வே. பஞ்சாட்சரம். அவர்கள் தமிழ்ப்பற்றையும் எழுதும் ஆர்வத்தையும் ஊக்குவித்தார் என்பதை, இத்தருணத்தில் பெருமையுடன் கூறிக் கொள்கிறார்.

உயர்தரம் கற்றபின் 1977 ஆம் வருடம் முதல் நியமனம் கிடைத்தது. மத்திய மாகாணத்தில் உள்ள சைல்ட் தமிழ் வித்யாலயம், களுகல தமிழ் வித்யாலயம், யோகலட்சுமி தமிழ் வித்தியாலயம்- கலஹா ஆகிய அரசாங்க பாடசாலைகளில் 1977 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை அதிபராக கடமையாற்றி விட்டு ஓய்வு பெற்றுள்ளார்.

அதன் பின்னர் கண்டி கிரீன் ஹில் சர்வதேச பாடசாலையில் கடமை புரிந்து, தற்பொழுது ஹாவட் மேத்தா சர்வதேச பாடசாலையில் கடமையாற்றுகிறார்.

குழந்தைகளோடு இருப்பதும் அவர்களுக்கு கற்பிப்பதும் இவருக்குப் பிடித்தமான ஒன்று. இதை முழு மனதுடன் சேவையாகவே



செய்வதாகச் சொல்லும் இவர், கஷ்டப்பிரதேச அரசாங்க பாடசாலைகளில் அதிக காலங்கள் கடமையாற்றியதாகவும், அப்பணியை விருப்புடன் செய்ததாகவும் தெரிவிக்கிறார்.

இவரது இலக்கியப் பயணம் பள்ளியில் படிக்கும் பொழுதே ஆரம்பமாகிவிட்டது எனலாம். இவருடன் இலக்கிய ஆர்வம் உள்ள மாணவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, கையெழுத்து பத்திரிகைகள் நடத்த, அதற்கு ஆசிரியர்களும் ஒத்துழைப்பு நல்கியுள்ளனர். ஆனந்த விகடன், குமுதம், கல்கி, கல்கண்டு முதலிய பத்திரிகைகளும் வாசிக்க வாசிக சாலையில் இருந்து கிடைத்த தமிழ் நூல்களும் இவரை எழுத ஊக்குவித்தன. இயற்கையை ரசிக்கும் ஆசையும் மானிடர்களின் துயரங்களை உற்று நோக்கி அதற்கு தீர்வு காணும் வேகமும் இவரை எழுதத் தூண்டின எனவும், ஆரம்ப காலத்தில் இலங்கை வானொலிக்கு எழுதி வந்ததாகவும் குறிப்பிடுகிறார். பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி, வாலிப வட்டம், இசையும் கதையும் போன்ற நிகழ்ச்சிகளுக்கு எழுதியுள்ளார். காங்கிரஸ் பத்திரிகையில் ‘பயணங்கள் முடிவதில்லை’ என்ற சிறுகதையே இவரது முதல் சிறுகதை ஆகும். இதன் மூலம் பத்திரிகைகளில் எழுத ஆரம்பித்து, இலங்கையில் வெளிவந்த தினகரன், வீரகேசரி, தினபதி, நான், கொழுந்து, கொந்தளிப்பு, மலைக் குருவி, சிந்தாமணி தீர்த்தக்கரை போன்ற பத்திரிகைகளும் இன்னும் பல பத்திரிகைகளிலும் நிறைய எழுதி உள்ளார். இவரது படைப்புக்கள் இலங்கையிலும் வெளிநாட்டு சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. பல கவிதைகள் மொழி பெயர்ப்பும் செய்யப்பட் டுள்ளன.

மலையக மக்களின் வாழ்வியல் வலிகளை சிறுகதைகள் கவிதைகள் மூலமாக சமூகத்தின் அவதானத்திற்கு கொண்டு வந்ததன் காரணத்தை இவ்வாறு குறிப்பிடுகிறார் நம் ஆளுமை. ‘நான் மலையகத்தில் உள்ள புசல்லாவை என்ற ஊரில் வசித்தபோது அங்கு எனது தந்தை கடை நடத்தி வந்தார். அந்த கடைக்கு நிறைய மலையக மக்கள் பொருட்களை வாங்க வந்து போவார்கள். அந்த மக்களின் வறுமை நிலை என் மனதை வாட்டியது. கல்வி, பொருளாதாரம், வாழ்க்கை வசதி என்பவற்றில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்த அவர்களது நிலை என்னை சிந்திக்க வைத்தது. குடிக்கும் பழக்கம் காரணமாக அவர்கள் மட்டுமின்றி அவர்களது சந்ததியினரும் வீணாகி இருப்பதை கண்கூடாக கண்டேன். அந்தக் குழந்தைகள் மலைக்கு பெயர் பதிந்து வேலைக்குப் போவதையும் வேறு இடங்களில் வேலை செய்வதையும் காணும் போது மிகவும் துயரம் அடைந்தேன். இந்த சந்தர்ப்பத்திலேயே மலையக பாடசாலைகளில் எனக்கு நியமனம் கிடைத்தது. சிறிது காலம் ஆசிரியராகவும் பின்பு தொடர்ச்சியாக அதிபராகவும் பதவி வகித்தபோது மலையக மக்களோடு மிகவும் நெருங்கி பழகும் சந்தர்ப்பமும் அந்த குழந்

தைகளின் நிலைப்பாடும் எந்தவித மான முன்னேற்றமும் இன்றி அவர்களது வாழ்க்கை வீணே புழுதியில் கிடைப்பதையும் கண் கூடாக கண்ட பொழுது எனக்கு அவர்களைப் பற்றி எழுத வேண் டும் என்ற உத்வேகம் எழுந்தது. என்னால் அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமானால், கல்வியில் மறுமலர்ச்சி ஏற்படுத்து வதுடன் அவர்களைப் பற்றி செய்தி களை வெளி உல குக்கும் கொண்டு வர வேண்டும் என்ற ஆதங் கத்திலேயே நான் எழுத ஆரம்பித்தேன். எழுத்து எனக்கு இந்த வகையில் கை கொடுத்தது என லாம்'

இவர் ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான SRILANKA PEN CLUB ன் சிரேஷ்ட உறுப்பினருமாவார். SLPC வெளியீடாக கடந்த வருடம் வெளிவந்த



'உலகம் முழுவதும் எங்கள் கதைகள்' சிறுகதைத் தொகுதி யிலும் இவரது சிறுகதை இடம் பெற்றிருக்கிறது. தவிரவும், SLPC காலாண்டு சஞ்சிகையான அவரின் சஞ்சிகையின் ஒன்ப தாவது வெளியீட்டில் அட்டைப்பட சாதனைப் பெண்ணாகவும் கௌர விக்கப்பட்டிருப்பது குறிப் பிடத் தக்கது.

பரிசுகள் பாராட்டுக்களை விரும்பி இலக்கிய சேவை செய்ய வில்லையென்றாலும் பிற்காலத் தில் கிடைத்த பொழுது மன நிறை வடைந்ததாக சொல்கிறார்.

### பெற்ற விருதுகளும் பரிசில்களும்:

- 1996 இல் கலைஞர் விருது
- 1996-2019-ல் இரத்தின தீப விருது.
- 2012 இல் 25 வருட இலக்கிய சேவைக்காக தினகரன் விருது
- 1977 தொடக்கம் 2011 வரை அதிபர் சேம நலன்புரி பாராட்டு விழாவில் கம்பளை வலைய தமிழ் அதிபர்கள் ஒன்றியம் 2012ல் வழங்கிய கௌரவ விருது
- 1997 இலங்கை ஒலிபரப்பு கூட் டுத்தாபனம் நடத்திய சிறு கதை போட்டிக்கான பரிசு.
- ரோட்டரி கிளப் நடத்திய கண்டி சுற்றாடல் மேம்பாடு தொடர்பான போட்டியில் முதல் பரிசு .
- 2014 ஹிஸ்புல்லா பவுண்டேஷன் பொற்கிழியும் விருதும்
- 2021 வழங்கப் பட்ட கலாபூஷ ணம் விருது
- 2021 சுட்டு விரல் முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் கவிதைகள் நூல் வெளியீட்டு விழாவில் கிடைத்த விருது (இந் நூலில் இவர் கவிதையும் இடம் பெற்றுள்ளது)

- 2021 இல், கலாபூஷணம் பெற்ற மைக்காக ஸ்ரீலங்கா பென் கிளப் அமைப்பினால் கௌரவித்து வழங்கப்பட்ட விருது.
- கண்டி விவேகானந்தா கல்லூரியில் இடம் பெற்ற தேசபந்து வேலுப்பிள்ளை சிதம்பரநாதன் அவர்களின் எண்பதாவது அகவை அமுத விழாவில் கௌர விப்பு
- 2023 கண்டி ரத்ன தீபம் அமைப்பினால் வழங்கப்பட்ட சித்தி லெப்பை ஞாபகார்த்த விருது
- அண்மையில் கனடாவிலுள்ள விழித்தெழு என்ற சர்வதேச அமைப்பில் சிறந்த இலக்கிய சேவைக்கான விருது என்பன குறிப்பிடத்தககவையாகும்.

*இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'சாமிலாவின் இதய ராகம்' என் னும் படத்திற்கு பாடல்கள் எழு தியுள்ளார்.*

*எமது ஆளுமை எழுதிய ஆக்கங்கள் வெளிவந்த நூல்கள், சஞ்சிகை களாவன*

- 1982ல் ஒரே மண் (சிறுகதை)- பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளி வந்த பாரிஸ் முரசு
- 1994 இல் துறவி பதிப்பகத்தாரின் உழைக்கப் பிறந்தவர்கள் என்ற தொகுப்பில் அப்பாவுக்கு கல் யாணம் என்ற சிறுகதை வெளி வந்தது. (இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனத்தால் பரிசு பெற்ற சிறுகதை)
- அந்தோணி ஜீவாவின் 25 இலங்கை பெண் எழுத்தாளர்க ளின் சிறுகதை தொகுப்பில் காயாம் பூவும் வாழை மரமும் என்ற சிறு கதை இடம் பெற்றுள்ளது.
- கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கமும் மாவட்ட சஞ்சிகை வெளியீட்டாளரும் கூட்டாக வெளியிட்ட சிங்கள கவிஞர் பராக்கிரம கொடி துவக்குவினால் மொழி பெயர்க்கப்பட்ட 'இந்து சாலங்கா' 'விவி தென பெய' ஆகிய நூல்களிலும் இவரது கவிதைகள் சிங்களத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. (இக்கவிதைகள் தமிழில் விழிப்பு என்ற சஞ்சி கையில் வெளிவந்ததாகும்)
- FOR THE DAWING OF THE NEW DREAM BOAT ஆங்கிலத்தில் இவரது கவிதைகள் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன.
- பென் கிளப்பினால் வெளியிட்ட அவரி சஞ்சிகையிலும் இவரது கவிதை இடம் பெற்றது

*இவரை அட்டைப்பட ஆளு மையாக கௌரவித்து பிரான்ஸி லிருந்து வெளிவரும் தமிழ்நெஞ் சம், துணிந்தெழு, அவரி* (SLPC) *ஆகிய சஞ்சிகைகள் அவரது நேர் காணலையும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. .*



## இவர் செய்துள்ள பொது சேவைகளாவன:

- தோட்டப்புற மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகள் நடத்தியுள்ளார்.
- முதியோர்களுக்காக எழுதவும் வாசிக்கவும் பயிற்சி
- தோட்டத்தில் வேலை செய்யும் இளம் பெண்களுக்கு எழுத வாசிக் கப் பயிற்சி
- ஏழை மாணவர்களுக்கு பயிற்சி நூல்களையும், கல்வி உபகரணங் களையும் வழங்கியுள்ளார்
- இவரது வாழ்நாள் முழுவதும் கஷ்டப்படும் மக்களுக்காகவே இவருடைய எழுத்துக்களைப் பயன்படுத்தியுள்ளார்.
- வாழ்நாள் முழுவதும் கஷ்டப் பிரதேசங்களில் கல்வி சேவை புரிந்துள்ளமை
- இளம் பெண்களுக்கான கருத்தரங்குகளை செய்துள்ளமை

*இலக்கியப்பணிக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்து வரும் இவருக்கு நல்வாழ்த்துகளும் பிரார்த்தனைகளும் உரித்தாகட்டும்!*











**ஷாமென் நிஸாம்டீன்**

இணையத்திலிருந்து மின்னிதழை டவுன்லோட் செய்து படிக்கலாம்

# தமிழ்நெஞ்சம்

மாத சஞ்சிகை



உங்களது ஆக்கங்களை
விரைவாக அனுப்பினால்
இதழில் இடம்பெறச் செய்வோம்.

e-mail : editor@tamilnenjam.com

9 772719 252001

tamilnenjam.com